Koviloor Digital Library

5-6

அக்னி ஹோத்ரம்

AGNIHOTRA

By

Manohar Madhavji Potdar

தமிழில் தருபவர் :

இராம. அரங்கநாதன்

பெர்க்ஸ் கல்வி நிறுவனங்கள்,

கோவை – 641 015

Institute for Studies in Vedic Sciences,
Shivpuri, Akkalkot.

ACC. NO: 2271
R.65

Koviloor Digital Library

காலை: அக்னிஹோத்ர மந்திரத்தின் பொருள்

"சூரிய பகவானே!
பிரஜாபதி பகவானே!

இந்த அவிசுகளை உங்களுக்குக்
காணிக்கையாக்குகிறேன்!

இனி இவை உங்களுடையவை.
எனக்கு இவை சொந்தமில்லை"

மாலை: அக்னிஹோத்ர மந்திரத்தின் பொருள்

"அக்னி பகவானே!
பிரஜாபதி பகவானே!

இந்த அவிசுகளை உங்களுக்குக்
காணிக்கையாக்குகிறேன்!

இனி இவை உங்களுடையவை.
எனக்கு இவை சொந்தமில்லை"

Printed At :
The Seshan Printers
Huzur Road, Coimbatore - 641 018
Phones : 212565 & 215350

Rupees : Ten

Koviloor Digital Library

அக்னி ஹோத்ரம்

2271

AGNIHOTRA

By

Manohar Madhavji Potdar

தமிழில் தருபவர் :

இராம. அரங்கநாதன்

பெர்க்ஸ் கல்வி நிறுவனங்கள்,

கோவை – 641 015

கோவிலூர் ஆதீனம்
2271
R65
கோவிலூர்-630 307

Institute for Studies in Vedic Sciences,

Shivpuri, Akkalkot.

1993 — 10/00

Koviloor Digital Library

அக்னி ஹோத்ரம்

உலகெங்கிலும் எச்சரிக்கை மணியொன்று ஒலித்துக் கொண்டு இருக்கிறது. நமது சுற்றுப்புறச் சூழல் மிக விரைவாக மாசுபடுவதை இன்று ஒவ்வொருவரும் உணர்கின்றனர், வேதனையுறுகின்றனர். இயற்கை மாறுபடுவதோடு அதனைச் சார்ந்த காற்று, நீர், நிலம் ஆகிய அனைத்தும் மாசுபடுத்தப்படுகின்றன. இயற்கையினுள் அமைந்துள்ள சம நிலையை இது கலைக்கின்றது. இந்த இயற்கைச் சமநிலைக் கலைப்பின் விளைவு மனித மனத்தில் மேலும், மேலும் மன உளைச்சலையும் இறுக்கத்தையும் ஏற்படுத்துகிறது.

வன்முறையும், பயங்கரமும், துயரமும், மனக்கவலையும் சுற்றுப் புறச்சூழல் மாறுபடுவதனுல் ஏற்படும் தீய விளைவுகள். இத்தீய விளைவுகளைத் தடுக்கவும் வெற்றி கொள்ளவும் ஒரு சரியான தீர்வு தேவைப்படுகிறது. வளர்ந்துகொண்டே போகும் மன உளைச்சலும் இறுக்கமும் அகற்றப்படல் வேண்டும். அப்போது தான் மனிதன் மகிழ்ச்சிப் பாதையில் வெற்றி நடை போட முடியும்.

மகிழ்வோடிருப்பது ஒவ்வொரு மனிதனுடைய உரிமை. இதனைப் பேணுவதற்கென ஒவ்வொருவரும் கடுமையாக உழைக்க முன் வருகின்றனர். எனினும் மகிழ்ச்சியைப் பற்றிய தனது தவருன கொள்கையின் காரணமாகவோ அல்லது கருத்தினுலோ மனிதன் தன் முயற்சி, சக்தி, நேரம் ஆகியவற்றை வீணான நோக்கங்களை அடைவதில் செலுத்திவிட்டான். உண்மையில் மகிழ்ச்சி என்பது மனத்தின் அக நிலையைப் பொருத்தது; உய்த்துணர முடிகின்ற அனுபவம். இதைச் சாதிப்பது எங்ஙனம்? இதனை அடையும் முறையைச் சரியான கோணத்திலிருந்து அறிந்து கொள்வதற்குப் பின் வரும் குறிப்புகள் உதவும் :

படைப்புக் கடவுளாகிய இறைவன், தன் படைப்புக்களோடு கூட, மனித இனம் முழுமையும் பயன் பெறத்தக்க வகையில் என்ஞான்றும் மெய்ஞ்ஞான வழிகள் ஐந்தினை வேதங்களின் மூலமாக உணர்த்தி உள்ளார்.

யக்ஞம் (அக்னிஹோத்ரம்), தானம், தவம், கர்மம், சுயபோதனை – என்ற ஐந்து தத்துவங்களை உடைய இவ்வைவகைப் பாதை, பரமானந்த மகிழ்ச்சியை அடைவதற்கான வழிகளைக் கோலுகிறது. மனித இனத்தின் நன்மைக்காகவும், உய்வுக்காகவும் முதன் முதலாக ஆக்கப்பட்டவை வேதங்கள். தற்போது நிலவுகின்ற அனைத்து மொழிகளுக்கும் தாயெனப் போற்றப்படும் சமஸ்கிருத

Koviloor Digital Library

மொழியிலேயே இவ்வேதங்கள் முழுதும் அமைக்கப்பட்டுள்ள பாங்கு இம்மொழி பெற்றிருக்கும் தெய்வீகச் சிறப்பை நமக்கு உணர்த்து கிறது.

மனித உருவில் அவதரித்த கடவுளின் சக்திகளும், இறை தூதர்களும், வேத குருமார்களும், முனிவர்களும் கூறுகின்ற உபதேசங்கள் அனைத்தும் யக்ஞம் முதலான ஐந்து தத்துவங்களை யுமே அடிப்படையாய்க் கொண்டிருக்கின்றன. இத்தத்துவங்கள் அனைத்தும் ஆத்ம சுத்தி (மனத் தூய்மை)யையே வலியுறுத்துகின்றன. இவ்வாத்மசுத்தி பெறுவதற்கு சுற்றுப்புறத் தூய்மை மிகவும் இன்றியமையாதது. 'அக்னி ஹோத்ரம்' சுற்றுப்புறத்தைத் தூய்மைப் படுத்துகிறது. சுற்றுப்புறத் தூய்மை நம் உயிரைத் தூய்மையாக்கு கிறது. உயிர் ஆன்மாவைத் தூய்மையாக்குகிறது. மகிழ்வான வாழ்க்கைக்குத் தூய மனம் இன்றியமையாதது. ஆகையால் 'அக்னி ஹோத்ரம்' செய்வது ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியமான கடமை ஆகிறது என்பது வெளிப்படை.

'அக்னி ஹோத்ரம்' என்பது ஒவ்வொரு நாளும் நமது வாழ்க்கை முழுவதும், சூரிய உதய, சூரிய அஸ்தமன நேரங்களில் தவறாது செய்ய வேண்டிய வேள்வி என்பது தான் இதன் முக்கிய கூறு. மற்ற வேள்விகள் குறிப்பிட்ட தேவையை நிறைவேற்றிக் கொள்ள ஒரு குறிப்பிட்ட அல்லது வரையறுக்கப்பட்ட காலகட்டத்திற்குள் நடந்து முடிந்து விடக்கூடியன. ஆனால் 'அக்னி ஹோத்ரம்' அப்படிப் பட்டதல்ல. இடையறாது செய்ய வேண்டுவது; என்றும் அழியாத நலங்களைத் தருவது. நம்மைச் சுற்றயுள்ள மாசுகள், தீமைகள் ஆகியவற்றை வென்று மகிழ்வுடன் வாழ ஒரு எளிய வழி இது. இவ்வேள்வியை நடத்த நமக்குத் தேவைப்படுவதெல்லாம் மிகக் குறுகிய காலமும், வெகு சில சிக்கனமான பொருள்களுமே! செய்முறை எளிது. செய்பவர்களுக்கு எவ்வித கல்விப் பின்னணி அடிப்படையும் தேவை இல்லை. வெற்றி தரும் முறையில் மிக ஒழுக்கமான வாழ்வை நடத்த விரும்பும் எவரும் இவ்வேள்வியை உடனே மேற்கொள்ளலாம்.

அக்னி ஹோத்ரம் என்பது என்ன? இதைச் செய்வது எப்படி?

சுருங்க இதற்கு ஒரு விளக்கம் தருவது என்றால், சூரிய உதய, அஸ்தமன நேரங்களில் ஒரு சிட்டிகை அளவு முனை முறியாத அரிசியுடன் சுத்தமான பசு நெய் கலந்து குறிப்பிட்ட மந்திர உச்சா டனங்களோடு அக்னியில் இடும் யாகமே 'அக்னி ஹோத்ரம்.' பசுஞ்

Koviloor Digital Library

சாண வரட்டியினைக் கொண்டு பிரமிடு (pyramid) வடிவமைந்த செப்புக் கலசத்தில் இந்த அக்னி வளர்க்கப்படுதல் வேண்டும்.

ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் அக்னி ஹோத்ரம் செய்யும் பொழுது கடைப்பிடிக்க வேண்டிய சில நெறிமுறைகள் உள்ளன. இவை இதற்கே உரித்தானதும் எளிதில் நடைமுறைப் படுத்த இயலுவதும் ஆகும்.

(1) வரையறுக்கப்பட்ட நேரம்

ஒவ்வொருவரும் தத்தம் வசிக்கும் இடங்களில் சூரிய உதய அஸ்தமன நேரங்களில் இந்த யாகத்திற்கென்றே சிறப்பாகத் தயாரித்த பசுஞ்சாண வரட்டியின் நெருப்பில் அக்னி ஹோத்ர அவிசுகளை (பசுநெய்யில் தோய்த்து எடுக்கப்பட்ட காணிக்கைப் பொருளாகிய அரிசியை) இடவேண்டும். ஒவ்வொரு ஊரிலும் சூரிய உதய, அஸ்தமன நேரங்கள் வேறுபடும். சரியான நேரத்திற்கு முன்போ அல்லது பின்போ செய்யும் அக்னி ஹோத்ரம் பயனற்றது. பயனற்றது, பயனற்றது! சப்பைக்கட்டு கட்டுகிற எவ்விதமான கருத்து வேறுபாட்டுக்கும் இதில் இடமிலலை.

அக்னி ஹோத்ரம் செய்து அதன் மூலம் அதன் முழுப்பயனையும் அடைய, சூர்யோதய சூர்ய அஸ்தமன நேரங்களை முதலில் அறிந்து கொள்ளுதல் அவசியம். இடத்திற்கு இடம் இந்த நேரங்கள் மாறுபடுபவை. அதே போல நாளுக்கு நாள் இந்த நேரங்களில் மாற்றம் இருக்கும்.

(2) சிறப்பு வடிவமும் அளவும் கொண்ட பாத்திரத்தைப் பயன்படுத்துதல்.

அக்னி ஹோத்ரா கலசத்தின் வடிவமும், அளவும் முக்கிய மானவை. இக்கலசத்தை செப்புப் பிரமிடு என்றே மேல்நாட்டினர் அழைக்கிறார்கள். இக்கலசத்தைத் தலைகீழாக வைத்தால் எகிப்திய பிரமிடு போலவே தோற்றமளிக்கும். இது செம்பு உலோகத்தாலோ அல்லது களிமண்ணாலோ ஆனது.

(3) பசுஞ்சாண வரட்டி நெருப்பு

அக்னி ஹோத்ர அவிசுகள் இடப்படுவதற்கான நெருப்பு பசுச்

Koviloor Digital Library 5-6

சாண வரட்டியினால் உண்டாக்கப்பட வேண்டும். பசு இனத்தின் சாணத்தையே பசுச் சாணம் என்கிறோம். பசுச் சாணம் தலை சிறந்த கிருமிநாசினி. எனவே இது நன்மை பயப்பது.

(4) அவிசுகள்

இந்த வேள்விக்காக முனை முறியாத முழுப் பச்சரிசியும், சுத்தமான பசு நெய்யும் அவிசுப்பொருள்களாக நிர்ணயிக்கப்பட்டு உள்ளன. அரிசியைத் தோய்த்தெடுக்கப் பசு நெய் மட்டுமே உப யோகப்படுத்தலாம். முன்பு குறிப்பிட்டபடி வேள்வி செய்யும் நேரம் எவ்வாறு மிக முக்கியமோ அதே அளவு பசு நெய் உபயோகமும் இன்றியமையாதது. பசு நெய் அக்னியில் இடப்படும் போது தோன்றும் புகை சுற்றுப்புறக் காற்றுச் சூழலின் மாசுகளை அழிக்கிறது.

(5) மந்திரங்களின் உச்சாடனம்

மந்திரங்களை உச்சரித்தல் தெளிவாகவும், அவசரமின்றியும் அமைதல் அவசியம். அச்சொற்களிலிருந்து உண்டாகும் ஒலி அலைகள் மனித மனத்திலும், சுற்றுப்புறத்திலும் மிக நுட்பமான பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இந்தச் சூழ்நிலையால் மனிதன் அமைதியுடன் கூடிய இனிமையான உணர்வைப் பெறுகிறான்.

(6) நெருப்பு மூட்டுதல்

நெருப்பு மூட்ட கெரோசின் அல்லது சமையல் வாயுக்கள் போன்றவற்றைக் கண்டிப்பாக உபயோகித்தல் கூடாது. மாசுகள் அற்ற கற்பூரமோ, காய்ந்த குங்கிலியமோ, சுத்தமான பசு நெய்யில் தோய்த்த பஞ்சுத் திரிகளோ பயன்படுத்தப்படலாம்.

(7) புகையில்லாத நெருப்பு

யாகத்திற்காக வளர்க்கப்படும் நெருப்பு புகையற்றதாக இருக்க வேண்டும். நெருப்பு தகுந்த முறையில் கிண்டி விடப்பட வேண்டும். அக்னி ஹோத்ர நேரத்திற்கு முன்பும், நேரத்திலும் நெருப்பு கொழுந்து விட்டெரிய வேண்டும். கொழுந்து விட்டெரிதல் என்பது புகையில்லாத நெருப்பு எனப் பொருள்படும். தீயின் சுவாலைகள் கொழுந்து விட்டு எரியும் நிலையிலேயே அக்னி ஹோத்ரம் செய்யப் பட வேண்டும்.

Koviloor Digital Library

மேற்கூறிய நெறி முறைகளுக்கு இணங்குவது ஒவ்வொரு நாளும் அக்னி ஹோத்ரம் செய்வதற்குச் சரியான செய்முறையைக் கடைப் பிடிப்பதை உறுதி செய்கிறது. ஒரு தடவை இந்தப் பழக்கத்தை ஏற்கத் தொடங்கிவிட்டால் இது சாதிக்க முடியாததல்ல என்றோ, கடினமானதல்ல என்றோ தெரிந்து கொள்வீர்கள். இது கற்பனை யில் காண்பதைக் காட்டிலும் எளிதானது.

அக்னி ஹோத்ரா செய்யும் முறை

அக்னி ஹோத்ரா செய்யும் சரியான முறை : நல்ல முனை முறியாத அரிசி இரண்டு சிட்டிகை அளவு எடுத்து உங்கள் இடது உள்ளங்கையில் வைத்துக் கொள்ளுங்கள், அல்லது இதற்கென்றே செய்யப்பட்ட சிறிய தாமிரத் தட்டில் வைத்துக் கொள்ளுதல் நல்ல தும், விரும்பத்தக்கதுமாகும். இந்த அரிசி மணிகள் அனைத்திலும் அப்பிக் கொள்ளுமாறு போதுமான அளவு சுத்தமான பசு நெய்யைத் தடவுங்கள். பசுஞ்சாண வரட்டியின் புகையில்லாத நெருப்பில் மந்திரங்களை ஜெபித்த பின் இந்த அவிசுகளை இடுங்கள்.

மாலையில் சூரிய அஸ்தமனம் ஆகும் சரியான நேரத்தில் கீழ்க்காணும் மந்திரங்களை உச்சரிக்க வேண்டும்.

Agnaye swaha Agnaye idam na mama!

அக்நயே ஸ்வாஹா அக்நயே இதம் ந மமா!
(முதற்கட்ட காணிக்கைப் பொருளை இடுதல்)

prajaapataye swaha prajaapataye idam na mama!

பிரஜாபதயே ஸ்வாஹா பிரஜாபதயே இதம் ந மமா!
(இரண்டாம் கட்ட காணிக்கைப் பொருளை இடுதல்)

காலையில் சூரியோதயமாகும் சரியான நேரத்தில் கீழ்வரும் மந்திர உச்சாடனைகளோடு அவிசுகள் நெருப்பினுள் இடப்படுதல் வேண்டும்:

Suryaya swaha suryaya idam na mama!

சூர்யாய ஸ்வாஹா சூர்யாய இதம் ந மமா!
(முதல் கட்ட காணிக்கைப் பொருளை இடுதல்)

prajaapathaye swaha prajaapathaye idam na mama!

பிரஜாபதயே ஸ்வாஹா பிரஜாபதயே இதம் ந மமா!
(இரண்டாம் கட்ட காணிக்கைப் பொருளை இடுதல்)

Koviloor Digital Library

அவிசுப்பொருள்கள் நெருப்பில் இடப்படும் பொழுது கவனமும், பொறுப்பும் அனுசரிக்கப்பட வேண்டுவது மிகவும் அவசியம். வேள்வி செய்யப்படும் இடத்தில் நம்மால் எவ்வளவு நேரம் அமர்ந்திருக்க முடியுமோ அவ்வளவு நேரம் அமர்ந்திருக்கலாம். அப்பொழுது நம் மனதில் தோன்றும் அமைதி அடுத்த அக்னி ஹோத்ர வேளை வரை நீடித்து இருக்கும். இந்த அமைதி நிலை தொடர்ச்சியாகச் செய்யப்படும் அக்னி ஹோத்ரத்தால் சற்றும் குலையாமல் பாதுகாக்கப்படுகிறது.

மேற்குறிக்கப்பட்டுள்ள மந்திரங்களைச் சொல்வதற்கு 15 அல்லது 17 நொடிகளே தேவைப்படும். அவிசுகள் எரிவதற்கு 2 நிமிடங்கள் ஆகின்றன. வேள்வியைச் செய்வதற்கு வேண்டிய கால அளவைக் கணக்கிடுவோமானால் அது மிகக் குறைவாகவே உள்ளது. பொருட் செலவும் குறைந்த அளவினதே. இவ்வேள்வியை ஒரு குடும்பத்தின் தலைவனோ, தலைவியோ செய்யலாம். ஆனால் மந்திரங்கள் மிகத் தெளிவாக உச்சரிக்கப்படுதல் அவசியம். மற்ற குடும்ப உறுப்பி னர்கள் அவர் அருகில் அமர்ந்து கொள்ளலாம். முறையாக மந்திரங்களை உச்சரிப்பதற்குத் தெரிந்திருப்பின் அவரோடு கூடவே சேர்ந்தும் சொல்லலாம்.

அக்னியில் போடப்படும் அவிசுகள் தங்களுக்குள் அகத்தே சில மருத்துவக்கூறுகளையும் பெற்றிருக்கின்றன. இவை எரிந்து காற்றில் கலக்கும் பொழுது சூரிய உதய, சூரிய அஸ்தமன நேரங்களில் உண்டாகும் இயற்கை மாறுதல்களில், பாதிப்புகள் தோன்றுகின்றன. இப்பாதிப்பு மனித உடலிற்கும், உள்ளத்திற்கும், அறிவிற்கும் சிறந்த பயன்களைத் தோற்றுவிக்கின்றன. வீட்டில் அமைதியான சூழ்நிலை, ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டு நடக்கும் மன ஆற்றல், ஒழுங்கு -இவை வளர இது உதவுகிறது. நம்மைச் சுற்றியுள்ள காற்று மண்டலம் உடல் நலத்திற்கேற்ற பொருள்களால் நிரப்பப்படுகிறது. அதன் நறுமணம் மனதிற்கு இதமளிக்கிறது.

மேலும், சிக்கல்கள் நிறைந்த இவ்வுலக வாழ்க்கைக்கு ஒரு மாற்று மருந்தாக இவ்வேள்வி அமைந்து, ஒவ்வொருவரும் தத்தம் வாழ்வில் தடைகளை மீறி உய்வு பெற உதவுகிறது. ஆகவே ஒரு நகரத்தில் அல்லது ஒரு பொது இடத்தில் அல்லது தனியாகக் கூடும் இடத்தில் மக்கள் பலர் ஒன்று கூடி அவர்களுள் தலைமையானவர் மந்திரங் களை உச்சரித்து, அக்னி ஹோத்ரத்தை முறையாகச் செய்ய, மற்றவர் கூட இருந்து பங்கு பெறலாம் என்ற ஆலோசனை வழங்கப்

Koviloor Digital Library

பட்டுள்ளது. ஒன்று கூடிச் செய்யும் இவ்வழக்கம், ஒவ்வொருவரும் தனித்தனியாக இதைச் செய்வதற்கு ஒரு சிறந்த தூண்டுகோலாக அமையும்.

அக்னி ஹோத்ரம் முடிந்தவுடன் அக்னி வளர்த்த பாத்திரத்தை அப்படியே விட்டு விடுங்கள். நெருப்பு தானாக அவிந்து சாம்பலாகும் வரை பாத்திரத்தில் அப்படியே கலையாமல் இருந்தால் சில நன்மைகளை நாம் அடையலாம். சில பயனுள்ள வீட்டு வைத்திய மருந்துகளுக்காகவும், மரஞ்செடி கொடிகளுக்கு உரமாகவும் இச் சாம்பலை உபயோகிக்கலாம்.

சில முக்கிய தன்மைகள்

1.கால வரையறை

பூமி தனது அச்சின் மீது சுழன்று கொள்வதோடு சூரியனையும் சுற்றி வருகிறது என்பதை நாம் அறிவோம். இது தன் அச்சில் ஒரு வட்டம் சுழல்வதற்கு ஒரு குறிப்பிட்ட கால அளவை எடுத்துக் கொள்ளுகிறது. இக்கால அளவு "இயற்கையின் தாளகதி" (Rythm of nature) எனப்படும்.

சூரிய ஒளிக்கதிர்கள் பூமியினுடைய எந்தப் பகுதியில் முதலில் விழுகின்றனவோ அந்தநேரம் சூரிய உதய நேரம் என்றும், சூரிய ஒளிக்கதிர்கள் பூமியினுடைய எப்பகுதியில் மறைகின்றனவோ அந்த நேரம் சூரிய அஸ்தமன நேரம் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு 24 மணி நேரத்திற்கும் ஒருமுறை இச்செயல்கள் நடைபெற்று வருகின்றன.

சரியாக சூரியோதயத்திலும், சூரிய அஸ்தமனத்திலும் இயற்கையில் ஏற்படும் மாற்றங்களின் நேரத்தை நாம் இயற்கையின் தாளகதி அல்லது காலப் பிரமாணம் என்கிறோம். இயற்கையின் காலப் பிரமாண அல்லது தாளகதிச் சுற்றில் மிகக் குறைவான நேரத்தை உடையன சூரிய உதயமும் சூரிய அஸ்தமனமும் ஆகும்.

வேறு தாளகதிச் சுற்றுகளும் உள. ஒவ்வொன்றும் ஏழு நாள் சுற்று (வாரம்), 15 நாள் (பக்ஷம்), 30 நாள் (மாதம்), 60 நாள் (பருவம்) 109 நாட்கள் (அரை வருட அயனம்), 365 நாட்கள் (ஆண்டு) ஆகிய பெரிய சுற்றுகள்.

Koviloor Digital Library

அண்டவெளி பௌதிகத்தில் குறுகிய தாளகதியை சுழற்சித் தாளகதி என்றும் பிறநீண்ட சுழற்சியை ஆகாயச் சுழற்சி என்றும் அழைக்கின்றனர். சுற்றின் இந்த இடைவெளிக் காலங்கள் (மாதங் கள்) நம் காற்றுச் சூழலில் திடீர் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இந்த மாற்றங்கள் நம் பூமிக் கோளத்திலுள்ள உயிரினங்களில் நன்மை, தீமை ஆகிய விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

நம்முடைய ஒவ்வொரு செயலும் வார, மாத, பருவ கால மாறுதல்களின் விளைவுகளை ஒட்டியே அமைகின்றன என்பதை ஒரு எடுத்துக்காட்டாகக் கூறலாம். உடலளவிலோ, மனத்தளவிலோ நலமோ, சோர்வோ நம்மைப பாதிக்கிறது. நோய் எதிர்ப்பு சக்தியும் வேறுபடுகிறது. நோய் தீர்க்கும் மருந்துகளின் தரமும் பாதிப் படைகிறது. ஆகவே அண்டவெளியில் ஏற்படும் காலச் சுற்றுக்களா லேயே மனிதன் பலவகைப்பட்ட மாறுதல்களைப் பெறுகின்றான்.

மனநிலை பாதிக்கப்பட்டவனை மன நோயாளி என்கிறோம். இந் நிலையைக் குறிக்கும் லூனாடிக் (Lunatic) என்ற சொல் லூனா (Luna) என்ற சொல்லினின்று பிறந்தது. லூனா என்ற சொல் சந்திரனைக் குறிக்கிறது. சந்திரனுடைய வளர்பிறை, தேய்பிறை மாற்றங்கள் மனித மனநிலையில் பாதிப்பை விளைவிக்கின்றன. இது காரணமாகவே பௌர்ணமி, அமாவாசை நாட்களில் மனநிலை பாதிக்கப்பட்ட வர்கள் உச்சநிலை அடைவதைக் கண்கூடாகவே பார்க்கிறோம்.

மழைக் காலத்தில் மேக மூட்டங்கள் காரணமாக வயிற்றின் ஜீரண சக்தி குறைந்து மந்த நிலை ஏற்படுகிறது. குடற்புண் மற்றும் இளைப்பு நோயாளிகளுக்கு இக்காலத்தில் நோயின் பாதிப்பு அதிகரிக்கிறது. மேலும் மனச் சோர்வு, பெண்களின் மாதவிடாய் நாட்கள், உயர் இரத்த அழுத்தம் ஆகிய மனித உடலின் உட்புறச் செயல்கள் மேலே குறிப்பிடப் பெற்ற இயற்கை ஒருங்கு நிலைச் சுற்றுகளினால் பாதிக்கப்படுகின்றன. மனோதத்துவக் கூற்றின்படி, இந்த ஒருங்கு நிலைச் சுற்றிலிருந்து வெளியாகும் ஒளி அலைகள், மின்காந்த அலைகள், காற்று மண்டல அழுத்தம் ஆகிய கூறுகளே இப்பாதிப்பிற்குக் காரணமாக அமைகின்றன.

பழங்கால வேத மருத்துவ விஞ்ஞானம் இயற்கையில் ஏற்படும் இம்மாறுதல்களை அடிப்படையாகக் கொண்டே ஆக்கப்பட்டது. இயற்கைத் தத்துவத்தின் முக்கியத்துவங்களை எடுத்துக் கூறி மனித இனத்தின் முழுமையான முன்னேற்றத்திற்கு வழி வகுத்துத் தந்தது.

Koviloor Digital Library

அக்னி ஹோத்ராவும் இவ்வியற்கைத் தத்துவங்களுள் ஒன்றை ஆதார மாகக் கொண்டதே.

பூமி சூரியனைச் சுற்றி வருவதால், மாறி மாறி ஏற்படும் சூரிய உதயமும், சூரிய அஸ்தமனமும் இயற்கையில் மிகப் பெரிய மாறு தல்களையும், செயல்களையும் உண்டாக்குகின்றன. ஆகவே அக்னி ஹோத்ராவும் சூரிய உதய, சூரிய அஸ்தமன நேரத்தில் தான் செய்யப்பட வேண்டும்.

கால வரையறை மிகவும் முக்கியமானதால் சரியான சூரிய உதய, சூரிய அஸ்தமன நேரங்கள் குறித்து வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். சரியான சூரிய உதயத்தின் பொழுது ஒளிக்கதிர்கள் பாய்ந்து மிகப் பெரிய மின்சார சக்தியினைத் தோற்றுவிப்பதால், அதே நேரத்தில் செய்யப்படும் அக்னி ஹோத்ரம் சூரிய மண்டலச் சக்தியினைக் கிரகித்து நமக்கு முழுப்பயனையும் தருகிறது. மேலும் செம்பு உலோகத்திலான பாத்திரத்தில் அவ்வேள்வி செய்யப்படுதலால் அங்கு ஒளிச் சக்திப் படலம் (Aura Energy Field) என்ற ஒரு மண்டலம் உண்டாக்கப்படுகிறது. சூரியனிலிருந்து வரும் உயிர் காக்கும் கதிர்கள் இந்த மண்டலத்தினுள் ஒரு முகமாகக் குவிக்கப்பட்டு நம்மைச் சுற்றியுள்ள தாவரங்களுக்கும், மற்ற உயிர்களுக்கும் மகிழ்வான சூழ்நிலையை உருவாக்கித் தருகிறது. ஆகவே குறிக்கப் பட்ட காலவரையறைக்குள் இவ்வேள்வியைச் செய்யாவிடில் எவ்விதப் பயனையும் நம்மால் பெற இயலாது. இக்கருத்தை 'Light towards Divine Path' என்ற நூலில் கீழ்க்கண்டவாறு விளக்கப்பட்டுள்ளது :

"சூரிய உதயத்தின் போது சூரியனிலிருந்து வெளிப்படுகின்ற பல நெருப்புகள், மின்சாரங்கள், ஈதர்கள் – மற்றும் இவற்றிலும் நுட்ப மான சக்திகள் முதலியன உலகம் வரை பாய்கின்றன. அவை சூர்ய உதயம் ஏற்படும் இடத்தில் ஒரு வெள்ளம் பாய்வது போன்ற விளைவை ஏற்படுத்துகின்றன. இது மிகத் தீவிரமான ஒன்று. இந்த ஒளி வெள்ளம் தன் பாதையிலுள்ள அனைத்தையும் உயிர்ப்பிக்கிறது. தூய்மைப்படுத்துகிறது. தன் பாதையிலுள்ள மாசடைந்த எல்லா வற்றையும் தூய்மைப்படுத்துகிறது. உயிரைப் பேணும் இந்தச் சக்தி யின் பாய்ச்சல் உயிரினம் அனைத்தையும் இன்புறச் செய்கிறது.

சூரிய உதயத்தின் போது ஒரு விதமான இன்ப இசையை நாம் உணர்கிறோம். காலை அக்னி ஹோத்ர மந்திரம் அவ்வகைப்பட்ட

Koviloor Digital Library

இசையில் ஒன்றே! அந்த ஒளி வெள்ளத்தில் ஏற்படும் மிகத் தூய்மையான அதிர்வு சூரிய அஸ்தமனத்தில் குறைகிறது .

சூரிய அஸ்தமனத்தின் போது நோய்க் கிருமிகளின் வளர்ச்சி அதிகமாக இருக்கும். எனவே அச்சமயத்தில் செய்யப்படும் அக்னி ஹோத்ரம் காற்றுச் சூழலில் உள்ள அக்கிருமிகளை அழிக்கும் சக்தியாகச் செயல்படும். அவ்வமயம் காற்றுச் சூழலில் உள்ள அத்தகைய கிருமிகள் அழிவதோடு சுற்றுப்புறம் முழுதும் தூய்மையாக்கப்படுவதற்கு அக்னி ஹோத்ரம் வழி செய்கிறது. சூரிய அஸ்தமனத்தின் போது அண்ட வெளிச் சக்திகளின் பாய்ச்சலில் ஒரு மாற்றம் ஏற்படுகிறது. எனவே பௌர்ணமி, அமாவாசை போன்ற இத்தகைய காலங்களில் காற்றுச் சுழலில் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

விண்வெளியிலிருந்து வரும் அனேக மின்சாரங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புள்ள சக்திகள் ஆகியவற்றின் பாய்ச்சலில் சூரிய உதயம், சூரிய அஸ்தமனம் ஆகிய நேரங்களில் செய்யும் அக்னி ஹோத்ரத்தில் நுட்பமான ஒரு விளைவை ஏற்படுத்துகின்றன. இந்தச் சூர்யோதய சூர்ய அஸ்தமன மாறுகாலங்கள் காற்றுச் சூழலைத் தூய்மைப்படுத்துவதற்கு முக்கியமான, அவசியமான காரணிகள். அக்னி ஹோத்ரம் செய்வதால் காற்றுச் சூழலில் ஒரு விளைவு ஏற்படுகிறது. இதனால் காற்று மண்டலம் ஒரு சிறப்பான வழியை யும், வடிவையும் பெறுகிறது. இது மனித மனத்தை அன்புணர்ச்சி கொள்ள உதவி செய்யும் அளவுக்கு உயிராற்றல் பெறுகிறது. அது போலவே மனமும் ப்ராணா என்னும் உயிராற்றலும் ஒன்றில் மற்றொன்று நல்விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இன்ப நிலை என்பது மனத்தின் நற்செயல்பாட்டினால் ஏற்படுகிறது.

இயற்கையின் சூரிய உதய, அஸ்தமனத் தாளகதியின் பின் இத்தகைய ரகசியம் இருப்பதைக் கண்டோம். அக்னி ஹோத்ரம் இந்தத் தாளகதியின் அடிப்படையிலேயே அமைந்திருப்பதால் இப் பழக்கத்தைப் பின்பற்றும் நேரங்களில் எவ்வித மாற்றமும் இருக்க முடியாது.

சூரிய உதய நேரத்தையும், சூரிய அஸ்தமன நேரத்தையும் கணிப்பதில் எவ்விதமான சிறு பிழையும் இருத்தல் கூடாது. காலவரையறையே முதன்மையான இன்றியமையாத விதியாதலால் இதில் எந்தவிதமான மாறுபட்ட கருத்துக்கும் இடமில்லை.

Koviloor Digital Library

காலையில் செய்யப்படும் அக்னி ஹோத்ரம், பிரமிடு வடிவுள்ள செப்புக் கலத்தைச் செயல்பட வைக்கிறது. கலசத்தின் சக்தியால் அந்த நாள் முழுவதும் தோன்றும் சூரிய சக்தியை ஈர்க்கிறது. அதே போல மாலையில் செய்யப்படும் அக்னி ஹோத்ரம் அந்நாளில் இரவுப் பொழுதில் சந்திரனாலும் மற்ற கிரகங்களாலும் வெளிப் படுத்தப்படும் சக்தியை ஈர்க்கிறது. இவ்வீர்ப்பு சக்தி, நம் வீடு முழுவதிலும் இருபத்து நான்கு மணி நேரமும் நீடித்திருக்கக் கூடிய ஒரு மகிழ்ச்சிகரமான சூழ்நிலையை உருவாக்குகிறது.

சூரிய உதய அஸ்தமன நேரங்கள் ஊருக்கு ஊர் வித்தியாச மானவை. ஒரு இடத்தின் அக்ஷரேகை, தீர்க்க ரேகை ஆகியவற்றைப் பொருத்து இவை மாறுபடும். சில உள்ளூர் பஞ்சாங்கங்களும், உள்ளூர் பத்திரிகைகளும், வானிலை ஆராய்ச்சி நிலையங்களும் சரியான நேரங்களை அறிய நமக்கு உதவும். இருப்பினும், நீங்கள் வசிக்கும் நகரம் குறிப்பிட்டுக் கீழே காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டால் ஒரு ஆண்டுக்கு சூரிய உதய அஸ்தமன நேரங்களை உடைய அட்டவணை கொண்ட குறிப்புகளைப் பெற்றுக் கொள்ளலாம் :

1) SHIVAKSHETRAM (NYAS)
Shivapuri,
Akkalkot 413216
SOLAPUR Dt,
Maharashtra

2) Mr.Arun Kulkarni
'Shruti'
Plot No.21, Vise Mala,
Near Sahajivan Colony,
Collage Road, Nasik
Maharashtra - 422 005

சூரியோதய நேரமும், சூர்ய அஸ்தமன நேரமும் நாளுக்கு நாள் மாறுபடும். இந்த அட்டவணை உங்களுக்குக் கிடைத்த பின் கைக் கடிகார நேரத்தை சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். இதைச் சுலபத்தில் செய்ய முடியும்.

Koviloor Digital Library

தேசிய ஒலிபரப்புக் கழகமும், அகில இந்திய வானொலியும், செய்தி ஒலிபரப்பின் முன்பும், பின்பும் அவ்வப்போது 'பீப்' 'பீப்' ஒலிகளை எழுப்பி சரியான நேரத்தை நமக்கு அறிவிக்கின்றது. இப்படி ஒலிக்கும் 'பீப்' 'பீப்' ஒலிகளின் கடைசி 'பீப்' நீண்டிருக்கும். இந்தக் கடைசி 'பீப்' தான் சரியான நேரம். எனவே நாள்தோறும் வானொலி அல்லது தொலைக்காட்சிப் பெட்டி மூலம் நேரத்தை அறிந்து நமது கடிகாரத்தை சரி செய்து கொள்ளலாம்.

பாத்திரத்தின் வடிவமும், அளவும்

பல்லாயிரம் வருடங்களுக்கு முன் எகிப்தில் கட்டப்பட்ட பிரமிடுகள் உலக அதிசயங்களில் ஒன்றாகத் திகழ்கின்றன. 'தலை கீழாக கவிழ்க்கப்பட்ட அக்னி ஹோத்ரக் கலசமே இப்பிரமிடுகள்' என்றோ 'தலைகீழாக நிறுத்தி வைக்கப்பட்ட பிரமிடுகளே அக்னி ஹோத்ரக் கலசங்கள்' என்றோ சொல்லுவதில் தவறு எதுவுமில்லை. இருப்பினும், உலகத்தில் படைக்கப்படும் உயிர்களைக் காப்பதற்கு, விஞ்ஞான அறிவோடு மேற்கொள்ளப்பட்ட அக்னி வழிபாட்டு முறை யுடன் அக்னி ஹோத்ரம் தொடர்பு கொண்டிருப்பதால் பிரமிடுகள் அக்னி ஹோத்ரக் கலசத்தை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டிருக்கின்றன என்ற கருத்தே பொருந்துமாறு உள்ளது. மேலும் 'பிரமிடு' என்ற சொல்லிலேயே இதற்கு நிரூபணமும் காணக் கிடக்கிறது. கிரேக்க மொழிச் சொல்லான 'பிர்' (Pyr) என்பதற்கு 'அக்னி' என்பது பொருள் 'அமிட்' (Amid) என்ற சொல்லிற்கு 'மையம்' என்பது பொருள். (Pyr - fire), (amid - centre) இரண்டு சொற்களையும் இணைத்துப் பார்க்கும் பொழுது 'ஒரு குறிப்பிட்ட வடிவமைப்பின் நடு மையத்தில் உறைந்திருக்கும் நெருப்பு' என்பது பொருளாக அமைகிறது. "Psychic Discoveries Behind the Iron Curtain" என்ற புத்தகம் பிரமிடு வடிவமைப்பிற்குள் நிலவும் அளப்பரிய சக்தியைப் பற்றி எடுத்துரைக்கிறது. இதற்குள் உண்டாக்கப்படும் மின்காந்த விசை இதனுள் வைக்கப்படும் எப்பொருளையும் சிதைவுறுதலில் இருந்தோ அல்லது அழுகுதலிலிருந்தோ தடுக்கிறது. 'நாஸா' (NASA) என்ற அமைப்பைச் சேர்ந்த விஞ்ஞானிகளின் கூற்றுப்படி இப்பிரமிடுகள் கொண்டுள்ள சக்தி, சூரிய சக்தியை விட அதிக அளவு மாறுதல்களைத் தோற்றுவிக்கக் கூடியது.

இம்மின்காந்த சக்தி, பிரமீடுக்குள் வைக்கப்படும் உணவுப் பொருள்கள், காய்ச்சாத பால், மற்றும் உயிரற்ற சடலங்களை அப்படியே அதன் தன்மை மாறாமல் பாதுகாக்கக் கூடியது. அவை

Koviloor Digital Library

நாற்றமடிப்பதில்லை.

மேலே கூறப்பட்டவற்றில் இருந்து இப்பிரமிடு வடிவத்தின் இன்றியமையாமையை உணரலாம். கரேல் டுர்பால் (Karel Drbal) என்ற செக்கோஸ்லாவாகியாவைச் சேர்ந்த விஞ்ஞானி மிகச் சிறிய அளவில் அமைந்த பிரமிடுகளைக் கொண்டு பல சோதனைகளை நடத்திப் பின்வரும் முடிவுகளை வெளியிட்டார். அவையாவன :

(1) பிரமிடு வடிவத்திற்கும், அதனுள் நடக்கும் பௌதீக, வேதிய, உயிரியல் செயல்முறை மாற்றங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. பிரமிடு வடிவமே மின்காந்த அலைகளையோ, அல்லது காஸ்மிக் அலைகளையோ அல்லது வேறு சக்தி அலைகளையோ சேகரிக்கிறது. பிரமிடுக்குள் குவியும் சக்தியே, பிரமிடுக்குள் ஏற்படும் பௌதீக, வேதிய, மற்றும் உயிரியல் வினைகட்கு அடிப்படையாக அமையலாம்.

(2) இப்பிரமிடு வடிவம் மனிதர்களுக்குத் தேவையான மிக நல்ல சக்திகளைக் கொண்டு விளங்குகிறது.

மேலும் சில ஆராய்ச்சியாளர்கள் இவ்வடிவத்தில் மருத்துவ மனைகள் அமைக்கப்பட்டால் அங்குள்ள நோயாளிகள் மிகக் குறுகிய காலத்திற்குள் நோயிலிருந்து விடுபடுவர் என்றும் மன நோயாளிகள் அமைதி பெறுவர் என்றும் நம்புகின்றனர். பிரமிடு வடிவத் தொப்பிகளை அணிந்தவர்கள் கடுமையான தலைவலியிலிருந்து விடுபடுவதாகவும், சொல்லப்படுகிறது. இவையெல்லாம் நமக்கு வியப்பையும், திகைப்பையும் அளிப்பனவாக இருப்பினும் உண்மை யிலேயே இப்பிரமிடு வடிவத்திற்குள் என்னென்ன செயல்மாற்றங்கள் நடைபெறுகின்றன என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

டாக்டர் அமர்கோஹுட் என்ற விஞ்ஞானியும், பிரமிடின் சிறப்பைக் குறிப்பிடும்போது இவ்வாறு சொல்கிறார் :

"ஏறத்தாழ ஒரு ஆண்டு காலம் ஒரு மில்லியன் டாலர் செலவில் கெய்ரோவிற்கு அருகில் இருக்கும் கிசே பிரமிட்டில் நடத்தப்பட்ட மிக நுட்பமான விஞ்ஞான ஆராய்ச்சியில் பல்வேறு வானவெளிக்கான எலெக்ட்ரானிக் கருவிகளின் துணையோடு செய்யப்பட்ட ஆராய்ச்சி யின் விளைவாக சில கருத்துக்களைச் சொல்லுகின்றேன். விஞ்ஞானி கள் பிரமிடுகளின் சாகசத்தில் குழம்பிப் போய் விட்டார்கள். பிரமிடுகளில் ஏற்படும் மாற்றங்கள் விஞ்ஞானக் கோட்பாடுகளுக்கு உட்படுபவன் அல்ல. ஏதோ ஒரு சக்தி பிரமிடினுள் இயங்குகிறது.

Koviloor Digital Library

அந்த சக்தி விஞ்ஞானக் கோட்பாடுகளை மிஞ்சுகிறது"

மேலும் "Psychic discoveries behind the Iron curtain" என்ற புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கின்ற சில கருத்துக்களையும் நோக்கும்பொழுது பிரமிடுகளின் மின்காந்த விசையின் வேகத்தை நாம் அறிய முடிகிறது. பிரமிடு வடிவத்தில் மின்காந்த அலைகள் திரள்கின்றன. பிரமிடுக்குள் வைத்த பொருள்களை அவை பாதுகாக்கின்றன.

இதே போல் தான் அக்னி ஹோத்ர கலசத்திலும் தோன்றும் சக்தி ஒரே மையத்தில் குவிக்கப்பட்டு சுற்றியுள்ள அண்ட வெளியில் கலக்க, சுற்றுப்புறம் தூய்மையடைகிறது. மாசுகளும், தீய கிருமிகளும் அழிக்கப்படுகின்றன. ஆகவே சரியான காலவரையறைக்குள் பிரமிடு வடிவுள்ள செப்புக் கலசத்தினுள் வளர்க்கப்படும் அக்னியில், இதமான ஒலி அலைகளை ஏற்படுத்தும் மந்திர உச்சாடனங்களோடு இடப்படும் அவிசுகள் மிக உன்னதமான மாற்றங்களை விளைவிக்கிறது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இக்கலசம் செம்பு உலோகத்தால் செய்யப்பட்டிருத்தல் நலம். ஏனெனில் செம்பு ஒரு சிறந்த மின்கடத்தி. செம்பு உலோகத்தின் மூலக்கூறுகள் பிரமிடு வடிவத்திலேயே உள்ளன என்ற யூகோஸ்லேவியாவைச் சேர்ந்த ஒரு விஞ்ஞானியின் கூற்றும், இச்செம்பு உலோகத்தாலான கலசமே அக்னி ஹோத்ரத்தில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

அக்னி ஹோத்ர வேள்விக்கலசம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளிலும் வடிவத்திலும் தான் அமைய வேண்டும் :

மேல் பாகம்	–	14.5 × 14.5 செ.மீ.
அடிப்பாகம்	–	5.25 × 5.25 செ.மீ.
உயரம்	–	6.5 செ.மீ.

குறுகிய அடிப்பாகத்தில் இருந்து விரிந்து மேலே செல்லுகிற பாகத்தில் மூன்று மட்டங்கள் உள்ளன. அளவுகள் சிறிது சிறிதாக மாற்றப்பட்டு மேல்குறிப்பிட்ட இலக்கை அடைய வேண்டும்.

வேத சாஸ்திரங்கள், அக்னி ஹோத்ரம் முதல் அசுவமேத யாகம் வரை உள்ள அனைத்து யாகங்களும், நடத்தப்பட வேண்டிய பொருள்கள், காலவரையறை, அவிசுகள் ஆகியவை பற்றி மிகத் தெளிவாகக் கூறியிருக்கின்றன. ஆனால் இவை யாகத்திற்கு யாகம் மாறுபடுகின்றன. அக்னி ஹோத்ரம் செய்வதற்கும், செம்புக் கலசமே

Koviloor Digital Library

உயர்ந்தது என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் செம்பு உலோகம் ஒரு சிறந்த வேதிவினை ஊக்கியாகவும், செயல்படக் கூடியது. ஆனால் செம்புப் பாத்திரம் கிடைக்கப் பெறாத பொழுது அதே வடிவமைப்புள்ள மண் பாத்திரமும் பயன்படுத்தப்படலாம்.

நல்ல திறம் வாய்ந்த அக்னி ஹோத்ர பாத்திரம் உதய சூரியன் அல்லது மறையும் சூரியன், சந்திரனது பிறைகள் ஆகியவற்றிலிருந்து வெளிப்படும் சக்திகளுடன் நேரடியான தொடர்பு கொள்ளுகிறது. பகலானாலும், இரவானாலும் அண்ட வெளியிலிருந்து வருகின்ற சக்திகளுடன் இப்பாத்திரம் தொடர்பு கொள்கிறது. இந்தச் சக்தி களை ஏற்கிற ஒரு கலசமாக இப்பாத்திரம் கருதப்படுகிறது. சில கால இடைவெளிகளில் இப்பாத்திரத்திலிருந்து சக்தி வெடிப்புகள் ஏற்படுவதற்கு இதுவே காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது.

அண்ட வெளியிலிருந்து கிடைக்கும் ஊட்டச் சத்துக்கூறுகளை வாங்கி வீட்டின் காற்றுச் சூழலில் பரவ விடுவதிலே தான் இதனுடைய திறன் பயன்படுகிறது. அக்னிஹோத்ரம் செய்த இடம் சிறிது சிறிதாகச் சுற்றிலும் உள்ள மாசுகள் அகற்றப்பட்டு, காற்றில் மனத்திற்கு மகிழ்வூட்டும் நறுமணம் நிரம்புகிறது. அக்னி ஹோத்ர நெருப்புடன் தொடர்பு கொண்டவுடன் அக்னி ஹோத்ர பாத்திரத்தின் திறன் பன்மடங்காகப் பெருகின்றது.

(3) சாண வரட்டியால் உண்டாக்கப்படும் நெருப்பு

இந்த யாகத்திற்கான அக்னி அல்லது நெருப்பு, பசுஞ்சாணம் அல்லது பசுக் குடும்பத்தைச் சார்ந்தவற்றின் சாணத்தால் தயாரிக்கப்பட்ட காய்ந்த வரட்டியின் மூலமாக உண்டாக்கப்படல் வேண்டும்.

இன்று உலகில் நிலவும் எல்லா மருத்துவ முறைகளும் சாணத்தில் நோய் தீர்க்கும் மூலங்கள் உள்ளன என்பதை ஒப்புக் கொள்கின்றன. மேலும் பழங்காலத்தில் பசுச்சாணம் சில நோய்களைத் தீர்த்துள்ளது. இப்பசுச் சாணத்தில் அதிக அளவில் காணப்படும் மெந்தால் (Menthol), அம்மோனியா, ஃபீனால் (Phenol). இன்டோல் (Indol). ஃபார்மாலின் (Formalin) மற்றும் கிருமிகளை அழிக்கக் கூடிய பாக்டீரியாக்கள், நம்மைச் சுற்றிப் பரவியிருக்கக் கூடிய அண்டவெளியைத் தூய்மையாக்கும் பணியில் ஈடுபடுகின்றன.

Koviloor Digital Library

இத்தாலிய விஞ்ஞானிகள், பசுச்சாணத்திலிருந்து வீசும் வாசனை, மலேரியா நோயைத் தவிர்க்கக் கூடிய வலிமை உடையது என்று கண்டறிந்துள்ளனர். பசுச்சாணத்தால் மெழுகப்பட்ட சுவர்களும், தரைகளும் கதிர் வீச்சிலிருந்து தடுக்கப்படுகின்றன என்று ரஷ்ய விஞ்ஞானிகள் கூறுகின்றனர். மேலும் மேலைநாட்டு மருத்துவர்கள், பசுச் சாணப் பொடியிலிருந்து வரும் புகையைக் கொண்டு சில சுவாச நோய்களைத் தடுத்து விடலாம் என்று சோதனைகள் மூலம் அறிந்துள்ளனர். ஆகவே பசுச்சாணம் ஒரு அங்கீகரிக்கப்பட்ட கிருமிநாசினியாகும். ஆகவே இத்தகைய அரிய பயன்களை உடைய பசுச்சாணத்திலிருந்து முழு அளவிலான நன்மையைப் பெற வேண்டுமெனில் கெரோசின் போன்ற எண்ணெய் கள் அக்னி வளர்த்துதலில் உபயோகப்படுத்தக் கூடாது. கற்பூரம், காய்ந்த குங்கிலியம், நெய்யில் தோய்த்தெடுக்கப்பட்ட பஞ்சுத் திரிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.

முன்பு குறிக்கப்பட்டபடி நெருப்பு முழுமையாக எரியும் பொழுது தான் அக்னி ஹோத்ரம் செய்ய முடியும் என்றதால் கோடைக்காலத்தில் அக்னி ஹோத்ரத்திற்கு 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாகவும், மழைக் காலத்தில் 15 அல்லது 20 நிமிடங்களுக்கு முன்பாகவும் நெருப்பினை மூட்டி விட வேண்டும். சாண வரட்டி; ஈரமாக இருப்பின் நெருப்பினைப் பற்ற வைப்பதற்கு அரசு, ஆல், அத்தி, வேல் போன்ற மரங்களின் காய்ந்த குச்சிகள் பயன்படுத்தப்படலாம்.

பசுச்சாண வரட்டியும் காய்ந்த மரக்குச்சிகளும் கலசத்தினுள் முறையாக அடுக்கி வைக்கப்படுதல் வேண்டும். கலசத்தின் தட்டையான அடிப்பகுதியில் வரட்டியினை வைத்து அதைச் சுற்றி வட்டமாக மரக்குச்சிகள் அடுக்கப்பட வேண்டும். நடுவில் ஏற்படும் காலி இடம், காற்று பரவி நெருப்பு சுவாலைகளாக எரிவதற்குப் பயன்படுகிறது. இவ்விடத்தில் கற்பூரமோ, பஞ்சுத்திரியோ வைக்கப் பட்டால் நெருப்பு கொழுந்து விட்டு எரிந்து அக்னி ஹோத்ரம் செய்வதற்குத் தயாரான நிலையை அடைகிறது.

அவிசுகள் (OBLATIONS)

அக்னி ஹோத்ரம் தினமும் இடையறாது செய்யப்பட வேண்டிய யாகம். வேறுபட்ட விதிமுறைகளையும் சிறந்த பயன்களையும் கொண்ட யாகங்கள் பல உள்ளன. அவை ஒவ்வொன்றுக்கும்

Koviloor Digital Library

பலன்கள் வேறு. தேவைப்படும் பொருள்களும் வேறு. ஆனால் எல்லா யாகங்களிலும் பொதுவாகப் பயன்படுத்தப்படக் கூடிய ஒரே பொருள் சுத்தமான பசு நெய்யே. இது தீயில் இடப்படும் பொழுது சுற்றுப்புறம் தூய்மையாக்கப்பட்டு நறுமணம் பரப்பப்படுகிறது. சுத்தமான பசு நெய்யை வேள்வியில் இடுவதால் தீவிரமாக மாசுபட்டுள்ள காற்று மண்டலத்திலுள்ள நச்சு வேதிப் பொருள்களால் ஏற்படும் தீய விளைவுகள் முறியடிக்கப்படுகின்றன.

பூனேயிலிலுள்ள ஃபெர்கூசன் கல்லூரியைச் சார்ந்த நுண்ணுயிரியல் விஞ்ஞானிகள் ஒரு சோதனையின் மூலம் சரியான காலத்தில் செய்யப்படும் அக்னி ஹோத்ரம் 8000 கன அடி காற்றில் கலந்துள்ள இயற்கையல்லாத மாசுகளை அழிக்கக் கூடியது என்று 36' x 22' x 10' அளவுகள் கொண்ட அறையில் பரிசோதித்துக் கண்டனர். மேலும் ஒரே அக்னி ஹோத்ரம் செய்த பொழுது 8000 கன அடி காற்றில் 77.5% தூய்மையாக்கப்பட்டு நைட்ரஸ் வாயுக்களால் நிரப்பப்பட்டது என்றும் கண்டனர். மேலும் ஒரே ஒரு அக்னி ஹோத்ரம் செய்து முடித்ததும் நோய்க் கிருமிகளில் 96% மறைந்து விட்டன என்பதும் உறுதிப்படுத்தப்பட்டது.

ஆகவே நெருப்பில் பசு நெய் இடப்பட்டால் அதனால் தோன்றும் சில வாயுக்களே இத்தூய்மையாக்கும் பணியில் ஈடுபட்டு அண்ட வெளியில் கலந்து, மனித இனம், தாவரங்கள், மற்றும் பிராணிகள் ஆகியோரின் நலத்திற்குப் போதுமான நன்மையைத் தரும் சுற்றுப்புறச் சூழ்நிலையை உருவாக்குகிறது என்பது தெளிவு.

அக்னி ஹோத்ரம் செய்வதற்கு பசு நெய்யே இன்றியமையாதது என்று வேதங்களிலேயே சொல்லப்பட்டிருப்பதால் இது அல்லாத மற்ற நெய்களை உபயோகிப்பது முறையற்றது. சிலர் எருமை நெய், வனஸ்பதியைப் பயன்படுத்துகின்றனர். இது தீய விளைவுகளைத் தரக் கூடியது. ஆகவே அவற்றை உறுதியாக விலக்குதல் வேண்டும்.

வேதங்களும், பழங்கால மருத்துவர்களும் 'பசுநெய்யே உயிர்' என்றும், 'மருந்துகளின் மருந்து' என்றும் இதைப் போற்றுகின்றனர். எனவே பசு நெய் மனிதனுக்காக பூமியில் உண்டாக்கப்பட்ட 'ஒரு ஒப்பற்ற மருந்து' என்று சொல்லுவதில் மிகையில்லை.

பசு நெய் தயாரிக்கப்படுவதற்கான பசுவின் பால் 101 வேறுபட்ட ஊட்டச் சத்துக்களைத் தன்னுள்ளே கொண்டுள்ளது. இதன்

Koviloor Digital Library

புரதத்தில் 19 அமினோ அமிலங்களும், வெண்ணெயில் 11 கொழுப்பு அமிலங்களும், தவிர 6 வைட்டமின்கள், 8 நொதிகள் (Enzymes), 25 கனிமங்கள் (Minerals), 2 சர்க்கரைகள், 5 பாஸ்பரஸ் சேர்மங்கள், 14 நைட்ரஜன் சேர்மங்கள், தவிர இன்னும் நமக்குத் தெரியாத பொருள்களும் உள்ளன. இந்தக் கூறுகள் அனைத்தும் கிடை பொருள்களாகவும், கரைந்தனவாகவும் நீர்ம நிலையில் இருக்கின்றன.

இத்தகைய பாலிலிருந்து தயாரிக்கப்படும் நெய், அரிசியோடு கலந்து மந்திர உச்சாடனங்களோடு தீயில் இடப்படும்பொழுது நான்கு விதமான வாயுக்கள் பரவுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது:

1. எத்திலீன் ஆக்ஸைடு
2. ப்ரொப்பிலின் ஆக்ஸைடு
3. ஃபார்மால்டிஹைடு
4. ப்யூடா ப்ரோபியோ லேக்டோன்

பசுவின் நெய் அக்னியில் இடப்படும்பொழுது அசெட்டிலின் என்ற எரிசக்திப் பொருள் உண்டாக்கி, காற்றின் மாசுக்களை உறிஞ்சி சுத்தப்படுத்துகிறது. வேள்வியின் போது உண்டாகும் இந்த ஐவகை வாயுக்கள் மனித மூளை அழுத்தங்களை அகற்றி இன்னும் பல நோய்களைப் போக்குகிறது.

நெய் வியத்தகு மருத்துவ சக்தி படைத்தது. இப்பசு நெய்யின்றி அக்னி ஹோத்ரம் செய்ய முடியாது என்பதை நினைவில் கொள்ள வேண்டுவது மிக அவசியம்.

நெய்யுடன் அக்னியில் இடப்பட வேண்டிய மற்றொரு பொருள் பச்சரிசி. சுமார் 200 கிராம் அளவுள்ள பச்சரிசி 30 நாட்கள் நடத்தப்பட வேண்டிய அக்னி ஹோத்ரத்திற்குப் போதுமானது. பச்சரிசியை கல், குருணை நீக்கிய பின்பே அவிசுப் பொருளாக இடுதல் வேண்டும். ஒரு சிட்டிகை அளவு சுத்தமான அரிசி ஒவ்வொரு முறையும் பயன்படுத்தப்படுதல் வேண்டும். பச்சரிசியின் 14 முதல் 18 சதவிகிதம் ஈரப் பசையும் மாவுப் பொருளும் ஆகும். அரிசியின் மேற்பகுதியில் எண்ணெய்ச் சத்து உள்ளது. கணிசமான அளவு ஒலியீனும், ஆல்பமினும் உண்டு. இது மட்டும் அல்லாது உலகின் எல்லா இடங்களிலும் மிக எளிதில் கிடைக்கக் கூடிய பொருள் அரிசியாதலால் இது அவிசுப் பொருளாகப் பயன் படுத்தப்படுகிறது.

Koviloor Digital Library

அக்னியில் இடப்பட்ட அவிசுகள் முழுவதும் எரியும் வரை அதன் அருகிலேயே சில நிமிடங்கள் அமர்ந்திருத்தல் வேண்டும். யாகத்தின் முழுமையான பயனை அடைய்வும் நம் மனம் மிக மெதுவாக நிதான மான நிலையை அடைந்து ஒருமுகப்படவும் இது உதவுகிறது. உயர் இரத்த அழுத்த நோய், ஆஸ்த்மா, குடற்புண் ஆகிய நோய்கள், தீவிர மான மன உளைச்சலாலும், மனதில் தோன்றும் எண்ண அழுத்தங் களினாலும் உண்டாகின்றன. இந்நோய்கள் அனைத்தும் அக்னி ஹோத்ரத்திற்கு அருகில் சிறிது நேரம் அமர்ந்திருக்கும் பொழுது வெகுவாகக் குறைகின்றன. அக்னி ஹோத்ரம் முடிந்தபின் மனதை ஒருமுகப்படுத்தி எண்ணங்களை நல்லவற்றின் மீது செலுத்துதல் வேண்டும். அப்படிச் செய்தால் நம் உடலும், உணர்வும், வரவேற்கத் தக்க மாற்றங்களைப் பெறுகிறது. மேலும் இதயம், மூச்சுக் குழல்கள், நரம்புகள் ஆகியவை வலுப்பெறுகின்றன. இரத்தக் குழாய்கள் விரிவ டைந்து இரத்த ஓட்டம் சீராகிறது. மனித மூளையில் அல்ஃபா (Alpha Waves) அலைகள் தோன்றுவது அதிகமாகிக் கடுமை தளர்கிறது.

இக்கூற்றுகளையும் விஞ்ஞான உண்மைகளையும் இணைத்து நோக்கும் பொழுது தியானத்துடன் கூடிய அக்னி ஹோத்ரம் 'உடனடிப் பயன் தரும் மாமருந்து' என்பது தெளிவாகிறது.

5. மந்திரங்களை உச்சரித்தல்

சில சொற்களுக்கு ஒன்றை ஆக்கக் கூடிய சக்தி இருக்கிறது. வேதங்களில் சொல்லப்பட்டிருக்கும் சொற்களும், இத்தன்மை யனவே. 'மந்திரங்களின் சக்தி' என்பது இவ்வாக்க சக்தியைக் குறிக்கிறது. எனவே தான் வேதத்தில் உள்ள சொற்கள் 'மந்திரங்கள்' என்று சொல்லப்படுகின்றன.

தொழில் துறை வல்லுநர்கள், சில நுணுக்கமான கருவிகளைக் கொண்டு வரைந்த வரைபடத்தின் மூலமாக, சில சொற்கள் இணை யும் பொழுது ஏற்படும் ஒலி அலைகளைக் கணக்கிட்டு இருக்கிறார் கள். இவ்வொலி அலைகள் தாவரங்கள், மிருகங்கள் ஆகியவற்றின் வளர்ச்சியில் பங்கு பெறுகின்றன என்ற செய்தியையும் நாம் அறிவோம்.

இறைவனால் படைக்கப்பட்ட அகர வரிசையில் அமைந்த வேத சாத்திரங்கள், முனிவர்களின் நல்லொழுக்கத்தோடு கூடிய கடின மான, விரதங்களால் அழிவற்ற நிலைக்குக் கொண்டு வரப்பட்டு

Koviloor Digital Library

உள்ளன. மேலும் இவர்கள் அவ்வேதங்கள் வெளிப்படுத்தும் உண்மைகளோடு அவற்றை உச்சரித்து வந்தனர். இவையே வேதங்களின் பின்னால் மறைந்து கிடக்கும் சக்தியின் காரணங்கள்.

வேதச் சொற்களை இரண்டு பிரிவுகளாகக் கூறலாம். ஒன்று நிலைச் சொற்கள் (Constant Words); மற்றது தற்காலிகச் சொற்கள். நிலையான வார்த்தைகள் எக்காலத்திலும் சில நிலையான அதிர்வு களை ஏற்படுத்தி பரிணாம வளர்ச்சியைத் துரிதப்படுத்தும். இதற்கு மாறாக தற்காலிகச் சொற்கள் காலப்போக்கில் மறந்து போகக் கூடியவைகளாகவும் அதனால் ஏற்படும் மாற்றங்கள் நிகழ்வின் முடிவிற்குப் பிறகு மறைந்து போகக் கூடியனவாகவும் அமையும். ஆகவே ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டு இருந்தாலும், இன்றும் வேதங்கள் பரிணாம வளர்ச்சிக்கு ஊன்று கோலாக அமைவதால், வேதச் சொற்கள் அல்லது மந்திரங்கள் முதல் வகையைச் சார்ந்தவை. அதாவது அவை எல்லாம் நிலைச் சொற்கள்.

அனைத்து மொழிகளுக்கும் தாய் என வழங்கப்பெறும் சம்ஸ் கிருத மொழியிலேயே வேதங்கள் அமைந்துள்ளன. மற்ற மொழி களில் சம்ஸ்கிருதச் சொற்கள் கலந்து வழங்கப்படலாம். ஆனால் சம்ஸ்கிருத மொழியில் மற்ற எந்த ஒரு மொழிச் சொல்லும் கலந்து வழங்குவதில்லை என்ற கருத்து இம்மொழியின் தனித் தன்மையைக் காட்டுகிறது. சம்ஸ்கிருத மொழியில் சில குறிப்பிட்ட சொற்கள், திட்டமான ஒலியுடன் வெளிப்பட்டு, குறிப்பிட்ட பாதிப்பினை அண்ட வெளியில் ஏற்படுத்துகின்றன. ஆகவே சொற்கள் மாற்றப்பட்டால் ஒலியும் மாறுபடுகிறது. விளைவுகளும் மாறுபடுகின்றன. ஒரே பொருள் அமைந்த இரு வேறு சொற்கள் அவை உச்சரிக்கப்படும் ஒலி மாற்றங்களால் இரு வேறு பாதிப்பை ஏற்படுத்துகின்றன. ஆகவே, அக்னி ஹோத்ர மந்திரங்களை மற்ற மொழிகளில் மொழி பெயர்த்தோ, மற்ற மொழி மந்திரங்களைப் பயன்படுத்தியோ சொல்லுதல் கூடாது என்பது தெளிவாக விளங்கும்.

சூரியனின் ஒளிப்பிரவாகத்தில் தோன்றும் ஒருவிதமான இசை வெள்ளத்தில் உண்டாகும் சக்தியின் சாராம்சம் தான் அக்னி ஹோத்ர மந்திரங்கள் என்று முன்பே சொல்லப்பட்டு உள்ளது. இவை வேற்று மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு உச்சரிக்கப்பட்டால், அதன் தூய்மையாக்கும் சக்தி வெளிப்படாமலேயே மறைந்து விடும். மேலும் இச்சம்ஸ்கிருத மந்திரங்கள் ஒலி அதிர்வுகளையும், வர்ணங்

Koviloor Digital Library

(varna)களையும் உண்டாக்குகின்றன.

வர்ணம் என்ற சொல்லுக்கு இரண்டு பொருள்கள் உள்ளன. ஒன்று ஒலி (அதிர்வு) ; மற்றொன்று நிறம். அதிர்வுகள், ஆற்றலைப் படைக்கின்றன. பூமி தோன்றியதும் அதிர்வுகள் மூலமாகத்தான் என்று விஞ்ஞானிகள் கூறி உள்ளனர். விஞ்ஞானிகள் ஒலி அலை களின் நற்பயன்களையும், தீய பயன்களையும் நன்கு அறிவர். உதாரணமாக இனிய இசை பசுவை அதிக அளவு பால் சுரக்கச் செய்கிறது. ஏன், செடிகளும், மரங்களும் கூட இசையால் மிக விரை வான வளர்ச்சியை அடைவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். மேலும் போர் வீரர்கள், பாலங்களைக் கடக்கும் போது தங்களுடைய சீரான நடையை மாற்றி, கண்டபடி மாறி மாறி நடைபோட்டுச் செல்கிறார்கள் என்பதையும், சீரான நடையில் ஏற்படும் அதிர்வுக ளினால் பாலம் தகர்ந்து விடக் கூடும் என்பதையும் அறியும்பொழுது ஒலி அலைகளின் அதிர்வுகளின் உண்மையான சக்தியை நாம் தெரிந்து கொள்ள முடிகிறது.

இனிய இசையின் ஒலி உடலுக்கும், மனதிற்கும் இதத்தைத் தருகிறது. 'அல்ட்ராசோனிக்' ஒலி அலைகள் கடலின் ஆழத்தைக் கண்டறிவதற்கும், நுண்ணிய அறுவை சிகிச்சை முறைக்கும், 'கான்சர்' என்ற புற்றுநோயை இனம் கண்டறிவதற்கும் இக்காலத்தில் பயன்படுத்தப்படுகிறது. இம்முடிவுகள் அனைத்தும் ஒலி அதிர்வு மருத்துவ சிகிச்சையில் பயன்படுத்தப்படும் அடிப்படை ஆதாரங்கள், அக்னி ஹோத்ர மந்திரங்களிலிருந்து பெறப்பட்டன என்பதை விளக்குகின்றன.

வர்ணம் என்பது நிறத்தைக் குறிக்கும் என ஏற்கனவே கண்டோம். வர்ண மருத்துவம் இன்றைய மருத்துவத் துறையில் மிக முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளது. ஒலி அல்லது சப்தம் 'டெசிபெல்' என்ற அளவால் கணக்கிடப்படுகிறது. சப்த அதிர்வுகள் மாறுபடும் போது நிறம் மாறுபடுகிறது. மந்திர சாஸ்திரக் கூற்றுப்படி சம்ஸ்கிருத அரிச்சுவடி வெள்ளை, சிவப்பு, மஞ்சள் என்ற நிறங்களாகப் பிரிக்கப்பட்டு உள்ளது. ஒவ்வொரு நிறமும் செயல்படுத்தப்படும் விதத்தில் முக்கியத்துவம் பெறுகிறது. உதாரணமாக சிவப்பு நிறம் தோல் மற்றும் இரத்த சம்பந்தமான நோய்களைக் குணப்படுத்த இய லும். மூளை வளர்ச்சிக்கும் உதவுகிறது. இதன் மூலம் பிறவியி லேயே மன வளர்ச்சி குன்றியவர்களையும், சூழ்நிலையின் தாக்கத்தால் மன நோய் பெற்றிருப்பவர்களையம் குணப்படுத்தலாம். இதைப் போன்றே

Koviloor Digital Library

மற்ற நிறங்களும் அவற்றின் உபயோகத்தைப் பொருத்து முக்கியத்து வம் பெறுகின்றன.

அக்னி ஹோத்ரம் நடக்கும் பொழுது நெருப்புச் சுவாலையில் தோன்றும் சிவப்பு, மஞ்சள், ஊதா நிறங்கள் அக்னி ஹோத்ர மந்திரங்களுடன் ஒன்றுபட்ட தொடர்பு கொண்டு தூய்மைப் பணியில் செயல்படுகின்றன. எனவே வர்ண மருத்துவத்தின் நற்பயன்கள் பலவற்றையும் அக்னி ஹோத்ர மந்திரங்கள் பெற்றுள்ளன.

மந்திரங்களைச் சொல்லும் பொழுது முணுமுணுத்தலோ, மிகச் சப்தமாகக் (கத்துதல்) கூறுதலோ, கண்டிப்பாக கூடாது. ஏனெனில் மந்திரச் சொற்கள் இதப்படுத்தும் பண்பையும், மனித மனத்தைக் கடுமைகளில் இருந்து தளர்த்தும் ஆற்றலையும் பெற்று அன்பையும், நல்லெண்ணத்தையும் தோற்றுவிக்கும் காரணியாக இருப்பதால் அவற்றை ஆர்வத்துடன் உச்சரித்தல் வேண்டும்.

இதுவே அக்னி ஹோத்ரா செய்வதற்கு மிக எளிதான நற்பயன் தரக் கூடிய ஒரு விஞ்ஞானப் பயிற்சி.

இவ்வேள்வி, கைக்கொள்ள வேண்டிய மிக எளிய விதிமுறை களைக் கொண்டு இலங்கி, மனித உயிரின் நலவாழ்விற்கு மூலாதார மான அழியாத அமைதியைத் தந்து மாசுகளை அழிக்கும் பணியில் முதன்மையாகச் செயல்படுகிறது. உலகம் இயற்கை செயற்கை மாசுகளால் அழிந்து கொண்டிருக்கின்றது என்ற அபாய அறிவிப்பினைக் கண்டு நாம் அச்சம் கொள்ள வேண்டுவதில்லை.

இது காரணமாக இன்று உலகம் முழுவதிலும் உள்ள விஞ்ஞானி களின் பார்வை அக்னி ஹோத்ரத்தின் மீது திரும்பி. உள்ளது. பல ஆராய்ச்சியாளர்கள் மருத்துவம், வேளாண்மை, நுட்ப ஆற்றல், கதிர் வீச்சு, நகர சக்தி, யோகம், இயற்கை மருத்துவம் ஆகிய துறை களில் அக்னி ஹோத்ர முறைப்படி ஆய்வு செய்து பல குறிப்பிடத் தக்க முடிவுகளை வெளியிட்டுள்ளனர். மேலும் தங்கள் விஞ்ஞான அறிவைக் கடந்து நிற்கும் இவ்வேள்வி, மனித இனம் உயர்வடைய மிகத் தேவையான ஒன்று எனவும் ஒப்புக் கொள்கின்றனர்.

நாம் சுவாசிக்கும் காற்று, பருகும் தண்ணீர், உட்கொள்ளும் உணவு எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் தினமும் அக்னி ஹோத்ரம் செய்வது. இது மனித இனத்தின் உய்வுக்கு ஆதாரம்.

Koviloor Digital Library

ஆகவே அக்னி ஹோத்ரா நம்மை நாமே உயர்த்திக் கொண்டு அமைதி பெற, தினமும் செய்யப்பட வேண்டிய ஒரு இன்றியமையாத வேள்வி. நம்மைச் சுற்றி விரிந்து பரந்துள்ள அண்டவெளியைத் தூய்மைப்படுத்த இதை விட மாறுபட்ட ஒன்று எதுவுமில்லை.

அக்னி ஹோத்ராவை இன்றே தொடங்குவோம்

நம்பகமான விஞ்ஞான முடிவுகள் சிலவற்றை இங்கு காண்போம். இவை அக்னி ஹோத்ரத்தின் மூலம் ஏற்படும் பொது நன்மைகளை ஒவ்வொருவரையும் நம்ப வைக்கின்றன.

(1) போதை மருந்துப் பழக்கம்

(பார்வை – லெப்டினண்ட் கர்னல் G.R. கோல்ச்சா, முதுநிலை உள மருத்துவ ஆலோசகர் இந்திய தரைப்படை.
இவரது கட்டுரை Indian Journal of Psychiatry 1987, 29 (3) PP 247-242 "அக்னி ஹோத்ரா – போதைக்கு அடிமையானவர்களைத் திருத்துவதில் செயலுக்கு ஒரு துணை முறை" என்ற தலைப்பினால் வெளியிடப் பட்டது)

சுருக்கமான சாராம்சம்

"ஆராய்ச்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் 25 வயதுடைய ஒரு அதிகாரி ; இவர் போதை மருந்துகள் பலவற்றைப் பயன்படுத்தியவர். இவர் இரண்டாண்டுகளாக ஹெராயின் உபயோகித்தார். இவரது மற்ற பழக்கங்கள் : சாராயம், கொக்கேயன், கன்னபிஸ், புகை பிடித்தல். இவர் உட்கொள்ளும் ஹெராயினின் அளவு ஒரு நாளைக்கு 3 கிராமுக்கு உயர்ந்துவிட்டது. இதற்கு முன் இவர் இரண்டுதடவை போதை பழக்க முறிவுச் சிகிச்சைக்குட்பட்டிருந்தார். இதனால் பலன் ஏதும் ஏற்படவில்லை. இவர் சிகிச்சைக்கு இணங்கு வதில்லை. அதை எதிர்த்தும் வந்தார். சிகிச்சைக்கு இவர் மறுப் பதைக் குறைக்கவும், இவருக்கு சிகிச்சையில் மனஉந்துதல் ஏற்படுத் தவும் முயன்ற உளமருத்துவர்கள் அயர்ந்தும் விட்டனர். அதற்குப் பிறகு இவரை அக்னி ஹோத்ரத்தில் நுழைத்தனர். மூன்று நாட்க ளுக்குப் பிறகு இதில் சிறிது நாட்டம் காட்டினார். தானாகவே அக்னி ஹோத்ரா கூட்டத்தில் சேர்ந்து கொண்டார். ஏழாம் நாளைக்குப் பிறகு அவரே இதைச் செய்யத் துவங்கினார்.

Koviloor Digital Library

இவரது முன்னேற்றத்தைச் சுமாராக அளவிட ஒரு அளவை ஏற்படுத்தப்பட்டது. இந்த அளவையில் பண்பளவும், கணிப்பு அளவும் இருந்தன. இந்த அளவைகள் கணக்கிடப்பட்டு வரைபடமாக்கப் பட்டன. அக்னி ஹோத்ரப் பழக்கம், அவர் போதைப் பொருட்களைத் தவிர்க்கும் முனைப்பை அதிகமாக்கியது, அவற்றின் மேலுள்ள விருப்பம் குறைந்தது. நான்கு வார அக்னிஹோத்ரப் பழக்கத்தினால் போதைப் பொருளில் இவரது ஆர்வம் குறைந்ததோ டன்றி சிகிச்சை எதிர்ப்பு தெரிவிப்பது சிறிது சிறிதாகக் குறைந்து இறுதியில் அடியோடு நின்றுவிட்டது. போதைப் பொருள்களை இவர் தானாகவே தவிர்க்கும் முனைப்புக்கு அக்னி ஹோத்ரம் வலுவேற்றியது. இவர் மற்றையோரைச் சார்ந்திருக்கும் மனநிலையும் குறைந்தது. இவர் மேல் மேலும் 15 மாதங்களுக்குப் பின் கவனிப்பு இருந்தது. பழைய பழக்கம் திரும்பவில்லை என்பது உறுதியாக்கப்பட்டது.

சிகிச்சைக்கு வரமுனைப்பில்லாத போதைப் பொருளுக்கு அடிமையானவர்களைத் திருத்துவதற்கு முன்னேற்றமடைந்த உள மருத்துவ முறைகள் குறையுடையனவாகவே ஆகின்றன. இந்தத் துறையில் அக்னி ஹோத்ரா ஒரு புதிய நம்பிக்கை.

(2) சாராயப் பழக்கம்

மீண்டும் லெப்டினென்ட் கர்னல் G.R.கோல்ச்சா ஒரு ஆய்வு நடத்தினார். இது கர்க்கியிலுள்ள இராணுவ மருத்துவமனையில் நடைபெற்றது. இவர் வெளியிட்ட கட்டுரையின் தலைப்பும் சாராயப் பழக்கத்தைத் திருத்துவதற்கு அக்னி ஹோத்ரா? இந்த ஆய்வுக் கட்டுரை 1989ல் கட்டாக் நகரில் நடைபெற்ற இந்திய உள மருத்துவர் சங்கத்தின் 41 ஆம் ஆண்டு விழாவின் போது அவரால் வெளியிடப் பட்டது.

சுருக்கமான சாராம்சம்

அக்னிஹோத்ரம் என்பது ஒரு வேதச்சடங்கு. சூரிய உதய, சூரிய அஸ்தமன நேரங்களில் மந்திர உச்சரிப்புடன் பிரமிடு வடிவிலுள்ள செப்புப் பாத்திரமொன்றில் நெருப்பை வளர்ப்பது இது. நரம்பு உடலியல் விளைவுகளை இது மனித உடலிலும், மூளையிலும் ஏற் படுத்துகிறது. கம்ப்யூட்டர் இணைந்த மூளையின் வரை கருவி, அக்னி ஹோத்ரத்தின் போது டெல்ட்டா அலைகள் ஒடுங்குவதையும் அல்பா அலைகள் ஒங்குவதையும் காட்டியது. இது மனத்தைச் சாந்தப்

Koviloor Digital Library

படுத்துகிறது. போதைக்கு அடிமையாவதிலிருந்து விடுதலை பெற உதவியாக இருக்கிறது. நான் மேற்கொண்ட ஆய்வில் சாராயப் பழக்கத்தையுடைய 18 பேர்களை வைத்துக் கொண்டேன். தொடர்ந்து இரண்டு வாரம் அக்னி ஹோத்ரம் செய்ததில் அவர்கள் முழுக்க முழுக்க சாராயத்தின் பக்கமே செல்லவில்லை என்பது தெரிந்தது அக்னி ஹோத்ரம் செய்ய வேண்டுமென்ற பிடிவாதமான ஆர்வம் ஏற்பட்டது. அக்னி ஹோத்ரப் பழக்கத்தை தொடராத பிறகும் கூட இந்த விளைவு மீண்டும் சில வாரங்களுக்கு நீடித்திருந்தது. அக்னி ஹோத்ரப் பழக்கத்தை நிறுத்திய இரண்டு வாரத்திற்குப் பிறகு இந்தச் சாராயப் பழக்கம் தொடரும். ஆனால் இது மிகக் குறைந்த சதவீதத்தினரிடையே தான் நிகழ்ந்தது. ஒழுங்காகப் பின்பற்றி வந்தால் அக்னி ஹோத்ரம், சாராயப் பழக்கத்தை நிறுத்துவதற்குரிய பயனுள்ள துணை முறையாகத் தோன்றுகிறது.

நரம்புசார் உடலியல் அளவைகள்

(பார்வை. கட்டுரைத்தலைப்பு. மந்திரங்களால் உடலிலும் மனத்திலும் ஏற்படும் உடலியல் விளைவு).

ஆசிரியர்.டாக்டர் W.செல்வமூர்த்தி, விஞ்ஞானி, உடலியக்கவிய லும் அதுசார்ந்த விஞ்ஞானத்திற்காக இராணுவப் பாதுகாப்புத் துறை நிறுவனம், டெல்லி

1989–ல் டெல்லி (IIT) இந்தியத் தொழில் நுட்ப நிறுவனத்தில் நடந்த யோகா மகாநாட்டில் சொற்பொழிவு.

சுருக்கமான சாராம்சம்

சூரிய அஸ்தமன நேரத்தில் இரண்டு அக்னி ஹோத்ர மந்திரங்களைச் சொல்வதால் ஏற்படும் நரம்பு உடலியல் விளைவுகளை டாக்டர் செல்வமூர்த்தி கவனித்தார். ஆய்வுக்காக நல்ல ஆரோக்கிய மான எட்டுப் பேர்களைத் தேர்ந்தெடுத்தார். அவர்களைஅடுத்தடுத்த இரண்டு நாட்களுக்கு மாலை 4 மணிக்கு வரவழைத்தார். முதல் நாள் போலியாக அக்னி ஹோத்ர சடங்குகள் நடந்தன. அப்போது மந்திரங்களுக்குப் பதிலாக சம்பந்தா சம்பந்தம் இல்லாத சில வார்த்தைகள் சொல்லப்பட்டன. அப்போது ஏற்பட்ட உடலியல் மாற்றங்கள் பதிவு செய்யப்பட்டன. இது ஒத்துப் பார்ப்பதற்கான பதிவுகள். அக்னி ஹோத்ரம் காலம் வரை இது நீடித்தது.

மறுநாள் உண்மையான அக்னி ஹோத்ரம் நடைபெற்றது. இதயத்

Koviloor Digital Library

துடிப்பு, இதய மின்வரை (ECG), இரத்த அழுத்தம் ஆகிய உடலியல் அளவைகள் பதிவு செய்யப்பட்டன. முதலில் எடுத்த பதிவுகளுடன் இப்பொழுது எடுத்த பதிவுகளை ஒத்துப் பார்த்தார். அக்னி ஹோத்ரத்தின் போது இதயத் துடிப்பு சாதாரணமாக இருப்பதைக் காட்டிலும் குறைவாக இருப்பதைக் கண்டார். அக்னி ஹோத்ரத்தின் போது தோல் வெப்ப நிலை 1°C உயர்ந்திருந்தது. சாதாரணப் பதிவில் இவ்வாறு ஏற்படவில்லை. சாதாரணமாக இருப்பதைக் காட்டிலும் அக்னி ஹோத்ரத்தின் போது GSR அர்த்தமுள்ள அளவுக்கு அதிகமாகியது. வெளியிலிருந்து ஏற்படும் சில மின்சாரக் குறுக்கீடுகள் போல ECG யில் DC நகர்வு ஏற்பட்டது. இது சூரிய அஸ்தமன அக்னி ஹோத்ர நேரத்தில் மட்டும் ஏற்பட்டது.

ECG ஒரே மாதிரியான மாற்றங்களைக் காட்டியது. அல்ஃபா பட்டையில் சக்தி அதிகமாகியது. அதே நேரம் டெல்ட்டா சக்தியில் ஒடுக்கம் தென்பட்டது. அல்ஃபா சக்தியில் இடது புறம் நகர்வு ஏற்படுவதை CSA காட்டியது. அதோடு கூட அல்ஃபா, தீட்டா சக்தி கள் திரண்டு 15 நிமிடங்களுக்கும் மேலாக நீடிப்பது தெரிந்தது. அக்னி ஹோத்ரத்தின் போது சக்தி நிலைகள் நான்கிலும், சக்தி அதிகமாகியதை இந்த ஆய்வு பதித்தது. இது மூளையையும், அதன் புறமும் ஒரே சமயத்தில் இயங்குவதைக் காட்டுகிறது. இது அக்னி ஹோத்ரம் நேரத்தில் நடைபெறுகிறது. மனம் சாந்தப்படுகிறது. இது அக்னி ஹோத்ரத்தின் போது அல்ஃபா சக்தியில் 20% கூடுதலா வதால் ஏற்படும் விளைவு என்று கருதப்படுகிறது. எனவே அக்னி ஹோத்ரச் சூழல் மனத்தைச் சாந்தப்படுத்தகிற நல்ல விளைவை ஏற்படுத்துகிறது.

நுண்ணுயிரிகளின் எண்ணிக்கை விளைவு

டாக்டர் A.G.மோண்ட்கார் பம்பாயைச் சேர்ந்தவர். நுண்ணுயிரி யல் ஆய்வைத் தொழிலாகக் கொண்டவர். அக்னி ஹோத்ரம் சூழல் எந்த அளவுக்கு நுண்ணுயிரிகளின் எண்ணிக்கையை பாதிக்கிறது என்பதைக் கண்டறியச் சோதனைகள் நடத்தினார். ஒரே அளவுகள் உள்ள இரண்டு அறைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. இரண்டு அறைகளிலும் அகார் தகடுகள் 10 நிமிட நேரம் வைக்கப்பட்டன. இந்த இரண்டு தகடுகளிலும் ஒட்டிக் கொண்ட நுண்ணுயிரிகளின் எண்ணிக்கை அளக்கப்பட்டது. இது அடிப்படைப் பதிவு.

Koviloor Digital Library

ஒரு அறையில் அக்னி ஹோத்ரம் செய்யப்பட்டது. ஒத்துப் பார்க்கும் மற்றொரு அறையில் வெறும் நெருப்பு மட்டும் ஏற்படுத்தப்பட்டது. அக்னி ஹோத்ரம் முடிந்த பின் அங்கு 2 மணி நேரத்திற்கு அகார் ஊடகங்கள் வைக்கப்பட்டிருந்தன. அக்னி ஹோத்ரம் நடைபெற்ற இடத்தில் நுண்ணுயிரிகளின் எண்ணிக்கை 91.4% குறைந்திருப்பதையும், அடுத்த அறையில் நுண்ணுயிரிகளின் எண்ணிக்கை அதிகமாக மாறவில்லை என்ற கருத்தையும் டாக்டர் மோண்ட்கார் கண்டறிந்தார். இது புகை மூட்டத்தால் ஏற்பட்டதன்று; ஆனால் அதற்கும் அப்பாற்பட்டது என்று கண்டறிந்தார்.

மேலும் சில தனித்தனியான நுண்ணுயிரிகளில், நுண்ணுயிர் ஆற்றல் பற்றியும் டாக்டர் மோண்ட்கார் ஆய்வு நடத்தினார். நுண்ணுயிரிகளின் வளர்சிதை மாற்றங்களின் செயல்திறனைக் கட்டுப் படுத்துவதில் அக்னி ஹோத்ரம் முக்கியமான பங்கு வகிக்கிறது என்ற முடிவுக்கு வந்தார்.

இன்னொரு சுவையான சோதனையில் டாக்டர் மோண்ட்கார் .அக்னி ஹோத்ரம் சாம்பலின் சிகிச்சைக் குணங்களை ஆராய்ந்தார். இச்சோதனைகளை இவர் முயல்களில் செய்து பார்த்தார். அக்னி ஹோத்ரம் சாம்பலைப் பயன்படுத்தி முயல்களின் சொறி சிரங்கைக் குணப்படுத்தினார். வழக்கமாக இந்நோய்க்கு பென்சைல் பென்சோவேட்டு உபயோகிப்பதில் 5–6 நாட்களில் சிரங்கு ஆறி விடும். அக்னி ஹோத்ரச் சாம்பல் களிம்பை ஒரே தடவையாகப் பயன்படுத்தியதில் சிரங்கு 3 நாட்களிலேயே குணமாகி விட்டது. சில சமயங்களில் பென்சைல் பென்சோவேட் பயன்படுத்தும் பொழுது நச்சுத் தன்மை ஏற்படலாம். அக்னி ஹோத்ரம் சாம்பலைப் பயன்படுத்திய பொழுது இந்த நச்சுத் தன்மை ஏற்படவில்லை.

காற்றிலிலுள்ள நுண்ணுயிர்த் தாவரங்களில் அக்னி ஹோத்ரம் ஏற்படுத்தும் விளைவுகளைப் பற்றியும் டாக்டர் மோண்ட்கார் ஆராய்ந்தார். அக்னி ஹோத்ரம் செய்வதற்கு முன்பு வளர்த்த ஸ்டாஃபால்பஸ் (Staphalbus), B சுப்ளிஸ் (B Sublis), எண்ட்டெரோக்காக்சை (Enterococci), E.கோலி (E.Coli), ஸ்டாஃபயோ (Staph Pyo) ஆகிய பாக்ட்டீரியாக் கூட்டங்களில் 30 முதல் 60 நிமிட நேரத்தில் அவற்றின் எண்ணிக்கை குறைந்தது கண்டறியப்பட்டது. அக்னி ஹோத்ரம் செய்ததற்குப் பிறகு நுண்ணுயிர்த் தாவரங்கள் குறைந்தது தெளிவாகியது.

Koviloor Digital Library

டாக்டர் B.R.குப்தா, கான்பூரில் உள்ள CSA வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் நுண்ணுயிரியல் துறையில் இணைப் பேராசிரியர். காற்றிலிலுள்ள பாக்டீரியாக்களில் அக்னி ஹோத்தி ரத்தின் விளைவுகளை பற்றிச் சோதனைகள் செய்தார். அக்னி ஹோத்ரம் செய்யாத மனிதர்களின் வாழ்விடங்களில் பாக்டீரியாவின் எண்ணிக்கை அளவு 123 ஆக இருந்ததையும், அக்னி ஹோத்ரத்தை ஒழுங்கு தவறாமல் செய்து வந்தவர்கள் வாழும் இடங்களில் பாக்டீரியாவின் எண்ணிக்கை அளவு வெறும் 25 ஆக இருந்ததையும் கண்டறிந்தார்.

அக்னி ஹோத்ரா சாம்பல் நோய் உண்டு பண்ணும் நுண்ணுயிரித் தாவரங்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகிறது. இது பற்றி அறிந்தவர் Wg. Cdr. D.V.K.ராவ். இவர் டெல்லி இராணுவப் பாது காப்புத் துறையைச் சேர்ந்த உடலியலும் அது சார்ந்த விஞ்ஞான நிறுவனத்தில் தனித்துறை வல்லுனர். இவர் அக்னி ஹோத்திரச் சாம்பலின் பாக்டீரிய முறிப்பு மற்றும் புண்களை ஆற்றும் இயல்புகளைப் பற்றி ஆராய்ந்தார். பலவித பாக்டீரியாக்கள், நுண்ணுயிர் எதிரினி மருந்துகளுக்கு எவ்வாறு எதிர்ச் செயல் காட்டு கின்றன என்ற சோதனையைச் செய்தார். இந்தச் சோதனைகள் அனைத்திலும் இந்தச் சாம்பல் பாக்டீரியாக்களை அழிக்கும் இயல்புடையது என்பது தெரிந்தது.

அக்னி ஹோத்ராச் சாம்பலின் புண் ஆற்றும் விளைவை இரண்டு வெள்ளை எலிகளின் மேல் சோதனை செய்து பார்த்தார். Wg. Cdr. ராவ். அக்னி ஹோத்ர சாம்பல் தடவிய புண் சுருங்கும் வேகம் கூடுதலாக இருந்ததை இவர் கண்டறிந்தார். புண்ணின் தழும்பின் திசுவைச் சோதனை செய்ததில் இது இயல்பாக இருப்பது தெரிந்தது. மேலும் அக்னி ஹோத்ரச் சாம்பல் பட்ட புண்ணின் பக்கம் இயல்பு நிலையை இச்சோதனையில் காட்டியது. சாம்பல் இடாத பாகத்தில் சோதனை செய்த பொழுது அவற்றில் உள்ள திசுக்களில் நார்வகைத் திசுக்கள் அதிகமாக இருந்தது தெரிந்தது.

Koviloor Digital Library

வேளாண்மை

விதை முளைப்பில் விளைவு

பூனாவில் உள்ள MJP வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர் டாக்டர் B.G.புஜ்பால். அக்னி ஹோத்ரம் சூழலில் திராட்சை விதைகளும், பதியன்களும் முளைப்பதைப் பற்றி இவர் ஆராய்ந்தார். ஹார்மோன்களைப் பயன்படுத்துதல், தழும்பு ஏற்றுதல் ஆகிய புதிய தொழில் நுட்ப முறைகளைப் பயன்படுத்தியும் கூட திராட்சைப் கொடிகளில் முளைப்புத் திறன் மிகக் குறைவாக இருந்தது. இது 20% மட்டுமே இருந்தது. மேலும் இலை விடுவதற்கு 300 நாட்களாகிய நெடுங்காலத்தை எடுத்துக் கொள்கிறது. இந்தக் குறைபாட்டை மனதில் கொண்டு இவர் மக்கள் விரும்பும் இனங்களை ஆராய்ச்சிக்குத் தேர்ந்தெடுத்தார். விதைகள் அனைத்தும் வேர் பிடிக்காத பதியன் குச்சிகளும் அக்னி ஹோத்ரம் சூழலில் வைக்கப்பட்டன. அக்னி ஹோத்ரச் சாம்பலாலும் பதம் செய்யப்பட்டன. அதே குவியலில் இருந்து இந்த முறைக்குட்படாத வற்றைப் பிரித்து ஒப்பு நோக்குவதற்காக வைக்கப்பட்டன.

விதைத்த 21 நாட்களுக்குப் பிறகு அவை முதல் முளை விட்டதைக் கண்ட இவர் வியப்புற்றார். எனவே அக்னி ஹோத்ரம் சூழல் 21 நாட்களிலேயே விரைவான முளைப்பைத் தூண்டி விட்டது. ஒப்பு நோக்கும் விதைகளோ 6 மாதங்களும் அதற்கு மேலும் எடுத்துக் கொண்டன முளைப்பதற்கு. அக்னி ஹோத்ரா பதம் செய்த வேர்ப் பதியன்கள் 10% வேர் பிடிப்பதைக் காட்டின. ஒப்புப் பதியன்கள் 80% வேர்ப் பதியன்களை காட்டின. அக்னி ஹோத்ரா பதம் செய்த பதியன்கள் மூலம் அறுவடை 24% அதிகமாகியது. அறுவடையின் போது இழப்பு எதுவும் இல்லை. நல்ல தங்க நிற மஞ்சளான பழங்கள் கிடைத்தன. ஒப்புக்குவியலில் அறுவடை இழப்பு 30% பழங்களும், மஞ்சள் கலந்த பச்சை நிறமாக இருந்தன. திராட்சைப் பழங்களிலிருந்து காய்ந்த பழங்கள் செய்வதற்கு அக்னி ஹோத்ரச் சூழல் உதவியாயிருப்பதைக் கண்டு வியந்தார். அக்னி ஹோத்ரச் சூழலில் திராட்சைக் கொத்துக்கள் 21 நாட்களில் வறண்டு விட்டன. 30 நாட்களில் அதன் சுவை நன்றாக இருந்தது.

Koviloor Digital Library

கான்பூரில் உள்ள CSA வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் மரபியல் துறையில் இணைப் பேராசிரியர் டாக்டர் ரமேஷ்ரயா மிஸ்ரா. வருணா வகையைச் சேர்ந்த ரை விதைகளில் அக்னி ஹோத்ரச் சாம்பல் ஏற்படுத்தும் விளைவுகளை இவர் ஆராய்ந்தார். இவரது ஆராய்ச்சியில் ரை விதைகள் பசுச் சாணத்திலும், பசுக் கோமயத்திலும் அக்னி ஹோத்ரச் சாம்பலிலும் 24 மணி நேரம் பதப்படுத்தப்பட்டன. விதைப்பதற்கு முன் இது செய்யப்பட்டது. இதே அளவு ஒப்பு விதைகள் இவ்வாறு செய்யப்படவில்லை. அக்னி ஹோத்ரச் சாம்பல் தூவிய விதைகள் 30% அதிக மகசூலைக் கொடுத்ததை டாக்டர் மிஸ்ரா கண்டறிந்தார்.

பிற வேறு துறைகளிலும் இதே போன்ற சோதனைகள் அக்னி ஹோத்ரா பல ஊக்குவிக்கும் நேரான விளைவுகளை ஏற்படுத்து கின்றது என்பதைத் தெரிவிக்கின்றது. விதைப் பாதுகாப்பு, மகசூல் அதிகரித்தல், மண் புழுக்களைப் பெருக்குதல் (இவை மண்ணின் இயற்கை ஊட்டச் சத்தை அதிகரிக்கின்றன) நிலத்திலிருந்து நீரில் கரையும் பாஸ்ஃபேட்டுகளை விடுவித்தல் மற்றும் இதனுடன் தொடர்பான வேளாண் செயல்களிலும் அக்னி ஹோத்ரம் உதவுகிறது.

கதிர் வீச்சு

ரேடியக் கதிர் வீச்சைக் குறைப்பதற்கும், களைவதற்குமான முயற்சியில் அக்னி ஹோத்ரா நெருப்பு மற்றும் சாம்பல் நல்ல பலனை அளித்து உள்ளன.

போலந்து நாட்டில் உள்ள அண்ட்டோனின் கௌஸ்க்காவைச் சேர்ந்த L.மாட்டெலா என்பவர் தம் கட்டுரையில் கூறுவது : போலந்து நாட்டில் உள்ள பயாலிஸ்ட்டாக் என்ற இடத்தில் காற்றிலும், தண்ணீரிலும் உள்ள ரேடியக் கதிர் வீச்சு இரண்டு மணி நேரத்திற்கொரு தடவை அளக்கப்பட்டது. இவ்வாறு இரண்டு வாரம் எடுத்த விவரங்கள், சர்வதேச அணுசக்தி முகவாண்மை வெளியிட்ட அதிகாரபூர்வமான விவரங்களுடன் அவை ஒத்துப் போயின. இன்னும் கூடுதலான தீவிரம் வாய்ந்த காமாக் கதிர் வீச்சு உள்ள நிலையில் அக்னி ஹோத்ராவின் விளைவை ஆராய்ந்தார் இந்தக் கட்டுரையாளர் .அக்னி ஹோத்ரச் சாம்பல் கரைந்த தண்ணீரைத் தெளித்த பொழுது நிலத்தின் கதிர் வீச்சளவு குறைந்து விட்டது.

Koviloor Digital Library

அக்னி ஹோத்ராவைப் பற்றி மேலும் மேலும் மதிப்புள்ள செய்திகளைக் கண்டறிவதில் அனேக ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டு உள்ளனர் என்பது ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவை வியத்தகு முடிவுகளுடன் விரைவில் வெளிவரும். எனினும் அவர்கள் எடுத்துக் கொண்டுள்ள முயற்சி புதையல் ஒன்றின் மீது தடுக்கி விழுவது போன்றதாகும். ஏனெனில் இந்தப் புதையலின் பெருவளம் இன்னும் அவர்களுக்கே தெரியாத ஒரு உண்மை நிலையாகும். அக்னி ஹோத்ராவானது மனித இனத்துக்கு பரமாத்மா வழங்கிய பரிசு. எனவே முழுமையானதும், சக்தி வாய்ந்ததும் ஆகும். விஞ்ஞான விதிகளுக்குக் கட்டுப்படாத ஒரு விசை பிரமிடில் இருக்கிறது என்று ஒரு எகிப்திய விஞ்ஞானி ஏற்கனவே ஒப்புக் கொண்டிருக்கிறார். பிற விஞ்ஞானி இதை அறிய முடியும்.

காற்று மண்டலத்தைக் குணப்படுத்துங்கள்!
அக்னி ஹோத்ரம் செய்யுங்கள்!

இவ்வுலகில் மழை, நல் அரசு, உயிர், வாழ்க்கை, பல சமயங்கள், தவம் இவை அனைத்தும் சிறக்க அக்னி ஹோத்ரம் செய்து உய்வு பெறுவோமாக!!!

*

This is what "THE HINDU" Dated 24.8.93 says about this book

Purifying flame

AGNIHOTRAM: By Manohar Madhavji Potdar, Rendered into Tamil by Rama Ranganathan, Founder, Perks Educational Institutions, Coimbatore-641015. Rs. 6.

Among the religious rites which Hindu scriptural texts have prescribed, Agnihotram is a daily must. The translator has described the procedure to be adopted to conduct this rite, which he says is a simple one. He has quoted from various research works how the smoke that emanates from the flames have tremendous potential to cleanse the atmosphere of its pollution, cure diseases, kill bacteria and set right human disabilities. The rite has to be observed twice daily without fail at dawn and dusk. Carefully selected rice particles mixed with pure cow's ghee are to be offered as oblation in fire, lit by camphor or wick, in a pyramid-shaped copper vessel. The flames are to be raised with dried cowdung cakes. How each one of these components have remedial powers and how the smoke that billows when oblations are offered, fetch tremendous power and the Mantra to be chanted during the process have also been explained. Drug addiction can be cured and the ash strewn in fields increases productivity (in agriculture).

D.V.V.

கோவிலூர் ஆதீனம் 630 307
2271
R65

Koviloor Digital Library

அக்னிஹோத்ராவின் வியத்தகு ஆற்றல்கள்

- போதை மருந்து மற்றும் குடிப்பழக்க அடிமையிலிருந்து விடுவிக்கிறது.
- நரம்புகள் சம்பந்தப்பட்ட உடலியல் நோய்களைக் குணமாக்குகிறது.
- நுண்ணிய உயிரினங்களைக் குறைத்து சுற்றுப்புறச் சூழலைத் தூய்மைப்படுத்துகிறது.
- நுண்ணிய உயிரினங்களின் வேகமான பெருக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது.
- "சைனஸ்" வியாதியால் உண்டாகும் கடுமையான தலைவலியை 3 அல்லது 4 நாட்களில் முற்றிலுமாகக் குணப்படுத்துகிறது.
- குழந்தைகளின் மிகையான செயல் திறனைக் (Hyper activity) குறைத்து அமைதிச் சூழலை ஏற்படுத்துகிறது.
- அக்னி ஹோத்ரா சூழலில் வயல்கள் மேலும் பண்படுத்தப்பட்டு மகசூல் அதிகரிக்கிறது.
- அக்னிஹோத்ரம், மண்புழுக்களைப் பெருக்கி உழவர்களின் வேலையை எளிதாக்குகிறது.
- அக்னிஹோத்ரா வேள்வியின்போது ஓதப்படும் மந்திரங்களின் ஒலி அலைகள் தாவரங்களின் இனப் பெருக்கத்தை ஊக்குவிக்கிறது.
- தொடர்ந்து செய்யப்படும் அக்னி ஹோத்ரம் நம்மைச் சுற்றியிருக்கும் இயற்கைச் சக்திகளை மனிதனுக்குப் பயனுள்ளதாக மாற்றுகிறது.
- அக்னி ஹோத்ரா சாம்பல், தோலில் படரும் நோய்களை முற்றிலும் குணப்படுத்துகிறது.
- எவ்விதமான ஆறாத புண்ணையும் மூன்றே நாட்களில் அக்னிஹோத்ரா சாம்பலினால் ஆற்ற முடியும்.

Koviloor Digital Library

- நகச்சுற்றின் மீது அக்னிஹோத்ரா சாம்பலை 3 அல்லது 4 நாட்கள் தடவி வந்தால் அது இருந்த இடம் தெரியாமல் மறைகிறது.
- எட்டு வாரங்கள் தொடர்ந்து தேனுடன் அக்னிஹோத்ரா சாம்பலைக் குழைத்து உண்டோமானால், மாதவிடாய்க் காலங்களில் உண்டாகும் அளவுக்கு மிஞ்சிய இரத்தப் போக்கு கட்டுப்படுத்தப்படுகிறது.
- 7 நாட்கள் தொடர்ந்து 3 வேளை அக்னிஹோத்ரா சாம்பலை உண்டால் சிறுநீரக வலி நீங்குகிறது.
- "மைக்ரேன்" எனப்படும் தாங்கொணாத் தலைவலி அக்னிஹோத்ரா சாம்பலினால் குணப்படுத்தப்படுகிறது.
- "டான்ஸிலிடிஸ்" எனப்படும் தொண்டையில் ஏற்படும் நுண்கிருமிகளின் பாதிப்பு, அக்னிஹோத்ரா சாம்பலைத் தினமும் 2 வேளை அரைத் தேக்கரண்டி அளவு உண்ண, நீக்கப்படுகிறது.
- அக்னிஹோத்ரா சாம்பலைக் கொண்டு உணவு தானியங்கள் நன்கு பாதுகாப்பில் வைக்கப்படலாம்.
- கரையும் தன்மையுள்ள "பாஸ்பேட்" என்னும் வேதிப்பொருள் அக்னிஹோத்ரா சாம்பலிலிருந்து வெளியேற்றப்படுகிறது; எலும்புகள் நல்வளர்ச்சி பெறுகின்றன.
- மனித உடல், மனம், ஆன்மா மூன்றிற்கும் சக்தி தரும் ஆற்றலாக அக்னிஹோத்ரா இலங்குகிறது.
- அக்னிஹோத்ரா, ஒரு மனிதனை அச்சமற்றவனாகவும், தீரமுள்ளவனாகவும் தன்னம்பிக்கை உள்ளவனாகவும் ஆக்குகிறது.
- எல்லாவிதமான சிக்கல்களிலிருந்தும் துன்பங்களிலி-ருந்தும் விடுபட அக்னிஹோத்ரா ஒரு சிறந்த காரணியாக அமைகிறது.

இராம. அரங்கநாதன்
பெர்க்ஸ் கல்வி நிறுவனங்கள்
கோவை – 641 015